உ

ஸ்ரீசற்குருவேநம.

சத்தப்பிரகரணம்.

இந்நூல்

சேஷகிரிசுவாமிகள்

மன்றூர்பாகவதரிவர்கள்

மரபிற்செய்யப்பட்டது.

இஃது

திருத்துருத்தி, கரபாத்திரசுவாமிகள்

பரம்பரைக்குரிய-நாகப்பட்டணம்

அருணாசலசுவாமிகளால்

பரிசோதித்த பிரதிக்கிணங்க

காரிநொடை

இலட்சுமணமுதலியாரால்

சிந்தாத்திரைப்பேட்டை

நாராயணசுவாமிமுதலியா

ரவர்களது

பிரபாகரஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

ஓம்

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சற்குருதேவநமா.

சத்தப்பிரகரணம்.

குருஸ்துதி.

బ్రహ్మానందం పరమసుఖదం । కేవలంజ్ఞానమూర్తిం
విశ్వాతీతంగగనసదృశంతత్త్వమస్యాదిలక్ష్యం ఏకంని
త్యంవిమలమచలంసర్వ దాసాక్షిభూతం భావాతీతం త్రి
గుణరహితంసద్గురుంతంనమామి। ॥౧॥

(இதனதுபொருள்.)

பிரமாநந்தஸ்வரூபமாகியுஞ், சிரேஷ்டமான சுக
த்தைக்கொடுப்பதாகியும், நிர்விகாரமாகியும், ஞான
வடிவமாகியும், பிரபஞ்சாதீதமாகியும், ஆகாசத்து
க்குச்சமானமாகியும், மஹாவாக்கியங்களுக்குலக்ஷி
யார்த்தமாகியும், ஒன்றாகியும், நித்தியமாகியும், நின்
மலமாகியும், அசைவற்றதாகியும், எப்போதுஞ் ச

க்ஷிமாத்திரமாகியும், பாவனைகளுக் கப்பாற்பட்டதாகியும், முக்குணங்களு மில்லாததாகியு மிருக்கின்ற சற்குருவை நமஸ்காரம்பண்ணுகிறேன்.

(இதுவுமது.)

మూకాంబికాకటాక్షాస్తమోహహీనంరోత్తశిష్యంయః
ఏకాత్మకం శేషగిరీశసుశేష వేదాంత దేశికంవందే ॥ ௨॥

(இதனதுபொருள்.)

மூகாம்பாளது கடாக்ஷத்தினாலே கெட்டமோகத்தினின்றும் விமிவித்தவராகியும், ஏகஸ்வரூபராகியுஞ் சமஸ்தமான உபநிடதங்களுக் காசிரியராகியுமிருக்கின்ற சேஷகிரீசனென்னு நாமதேயத்தை யுடையவாசாரியனை நமஸ்காரம்பண்ணுகிறேன்.

சத்தப்பிரகரணம் - அவையாவன.

தனது நித்தியானந்த சுயம்பிரகாசத்தினின்றுமோரறிவு சங்கற்பரூபமாகத் தோன்றிப் பகிர்முகமானவிடத்துண்டான அறிவறியாமையே பிரகிருதிமகத்தத்துவமெனவும் அவற்றினின்றும் விகற்பித்தெழாநின்ற அறிவினறிவறியாமையே மாயையவித்தையெனவும், அவற்றிற் பிரதிபலித்த சீவேஸ்வர சங்கற்பவிகற்பமே ஞானமுதலியவிருபத்தைந் தத்துவங்களெனவும், அவற்றினின்றுஞ் சங்கற்பரூபமாகப்பரிணமித்ததே பாஞ்சபூதபவுதிகமெனவும் அவற்றை

ச்சங்கற்பவிகற்பரூபமானசித்தவிருத்தியால்வருகிற
ராகத்துவேஷங்களா லனுபவிக்குஞ் சுகதுக்கங்களை
விடயமெனவுந் தோற்றிய (அத்தியாரோபத்தை)
அபவாதத்தான் முன்னுண்டான முறைமைப்படி
யடக்கித் தனதுநிசானந்தத்தை வெளிப்படுத்துநிமி
த்தம் அருளேதிருமேனியாக வெழுந்தருளிய சே
ஷாத்திரிசிவனுமொன்னு ஞானாசாரியர் சங்கற்பவிகற்
பத்தினால் விருப்புவெறுப்புண்டாய் அதனால் விடய
ங்களிற் சுழலாநின்ற சித்தத்தின்விருத்தியைக் கெடு
த்ததற்குச் சுத்தியுண்டாகும்பொருட் டவ்விருப்பு
வெறுப்பை ராகத்துவேஷப் பிரகரணமெனவும்,
அச்சித்தசுத்தியுண்டானவிடத்து இதார்த்தத்தைக்கா
ண்பதற்கேதுவாகத் தோற்றினகுறியைத் தெரிவித்
தற்பொருட்டதனைச் சாதன சதுஷ்டயப்பிரகரண
மெனவும், அவையுதித்தவிடத்து பஞ்சபூத பவுதிக
முதலியவனைத்துஞ் சடமெனத் தெரிவித்தற்பொரு
ட்டவற்றைத் தூலப்பிரகரணமெனவும், அவைகள்
சடமானவிடத் தவைகளை மேற் சித்தைக்கொண்ட
சைப்பிக்கு மந்தக்கரணங்களைச் சடமென் றறிந்த
வைகளை நீக்குதற்பொருட் டவற்றைச் சூக்குமப்பிர
கரணமெனவும், அவைகளடங்கினவிடத் தவைகட்
குக் காரணமான மாயையவித்தையை யாரோபித
மென் றறிந்தகற்றும்பொருட் டவற்றைக்காரணப்பி

ரகரணமெனவும், அவைகணீங்கினவிடத் தெதிரிட்ட ஜீவேஸ்வரர்களை மறைத்த மகதத்துவம் பிரகிருதிகளைச் சிற்பிரகாசமாக நீக்குதற்பொருட் டவைகளை மகாகாரணப்பிரகரணமெனவும், இவைகளனைத்துந் தற்பிரகாசமாக நீங்கினவிடத்துத் தனதுசுயம்பிரகாசமாகவிளங்காநின்ற நித்தியானந்தமேதமது ஸ்வரூபமெனத் தெரிவிக்கும்பொருட் டதனை நிசானந்தானு பூதிப்பிரகரணமெனவும் பகுத்துக்கூறிய வேழுபிரகரணங்களாம். இங்ஙன முறையாகக்கூறத்தொடங்கிய இப்பிரகரணங்களுண் முந்தின பிரகரணத்தில் ராகத்துவேஷாதிகளின் ஸ்வரூபத்தை நிரூபிக்கிறார்.

(சுலோகம்.)

కామాద్యాష్షోడశగుణా హేయోపాదేయతాంగతాః
తషాంస్వరూపంప్రథమంతావత్తత్రనిరూప్యతే। ౩ ।

(இதனதுபொருள்.)

காமமுதற் பதினாறுகுணங்களில் - ராகமுதற்பதின்மூன்றுந்தள்ளத்தக்கனவும் - இச்சைமுதன் மூன்றுங்கொள்ளத்தக்கனவுமாம். அவைகளின் ஸ்வரூபம் நிரூபிக்கப்படுகின்றது. ராகத்தினம்சமேகாமமாதலாற் காமாதியெனக்கூறினார். இப்பதின்மூன்றும் ராகத்துவேஷங்களின் பரியாயமெனக்கொள்க.

எந்தராகத்துவேஷங்களினூற் றிரிவிதகரணங்களு ந் திரிவிதகன்மங்களைச் செய்கின்றதோ வந்த ராகத் துவேஷங்களின்குணங்களை நிரூபிக்கிறேம். (அவை யாவன) ராகம்- துவேஷம்-காமம்-குரோதம்-லோ பம்-மோகம்-மதம்-மச்சரம்- ஈரிஷை-அசூயை-டம் பம்-தர்ப்பம் - அகங்காரம்- எனப் பதின்மூன்றும். இப்பதின்மூன்று மோக்ஷமடைதற்கு விக்கினமா யிருக்கின்றபடியா னிவற்றை முமூட்சுவானவர்கள் காலத்திரயங்களிலும் பரிசியாமற் சர்வாத்மனு விட் டுவிடவேண்டியது சித்தம். (இவைகளின் விபரம்.) பரஸ்திரீக மனம்பண்ணவேண்டுமென்று விகற்பித் துவருகிற சித்தவிருத்திக்குராகமென்றுபேர். இதை முமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனுவிட்டுவிடவேண்டியது. ஏன்விடவேண் டியதென்றல்-பூருவத்தி லிராவணன் பரதாரமான சீதையம்மனை யிச்சித்த ராகத்தினு லவன் பிராண ஹானி பந்துநாச மிராச்சிய ஹானி யிகபரங்களி லபகீர்த்தி யிவைமுதலான வநேக வநர்த்தங்கள் அனு பவித்ததும் இன்னுஞ் சகோதரரான சுந்தோபசுந் தா விருவருந் திலோத்தமையைக்கண்டு உன்பாரி யென்பாரியென் றடித்துக்கொண் டிறந்ததும் இன் னுமநேகம்பேர் இந்தராகத்தினூற் றுக்கமனுபவித்த துஞ் சாத்திரங்களிற்கண்டிருக்கிறே மானபடியினு

லும் இப்போதிருக்கிறபேர்களு மிந்தராகத்தினு லநேகதுக்கமனுபவிப்பதைப் பிரத்தியக்ஷமாகக்கண்டிருக்கிறபடியினாலும் இனி பிறக்கப்போகிறபேர்களிடத்திலு மிந்தராகமிருந்தாற் றுக்கமேயனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலும் இந்தராகத்தை முமூட்சுவானவர்கள் சர்வாத்மனாவிட்டுவிடவேண்டியதுசித்தம். இப்படியே தனக்கொருவனபகாரம்பண்ணினு லவனுக்குவதிலபகாரம்பண்ணவேண்டுமென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்குத்துவேஷமென்றுபேர். இதை முமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலுமில்லாமற் சர்வாத்மனாவிட்டுவிடவேண்டியது. ஏன் விடவேண்டியதென்றால் பூருவத்தில் இரணியகசிபன் தன்றமையனைக்கொன்ற நாராயணனைக் கொல்லவேண்டுமென்ற துவேஷத்தினு லவனுடைய பிராணஹானி பந்துநாச மிராச்சியஹானி யிகபரங்களி லபகீர்த்திக ளிவைமுதலான வநேகவநர்த்தங்க ளனுபவித்தது மின்னுமநேகம்பேரிந்தத் துவேஷத்தினால் துக்கமனுபவித்ததுஞ் சாத்திரங்களிற் கண்டிருக்கிறோமானபடியினாலும் இப்போதிருக்கிறபேர்களு மிந்தத்துவேஷத்தினு லநேகதுக்கமனுபவிப்பதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினாலும் இனி பிறக்கப்போகிறபேர்களிடத்திலு மிந்தத்துவேஷமிருந்தாற் றுக்கமேயனுப

விப்பார்களென்று தோற்றுகிறபடியினாலும் இந்தத்துவேஷ முமூட்சுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்-இப்படியேபுத்திரமித்திர கிரகக்கிராமக்ஷேத்திர தனதான்யாதிகண் மேன்மேலுஞ் சம்பாதிக்கவேண்டுமென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்குக்காமமென்றுபேர் - இதை முமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலுமில்லாமற்சர்வாத்மனாவிட்டுவிடவேண்டியது. ஏன் விடவேண்டியதென்றால் பூருவத்தில் நரகாசுரன் லக்ஷம் ஸ்திரீகளைக் கலியாணஞ்செய்வதற்காசித்துத் தேவஸ்திரீகள் பதினாறாயிரம்பேர்களைச் சிறைபிடித்து வந்ததைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியா லவன்பிராணஹானி பந்துநாச மிராச்சியஹானி யிகபரங்களிலபகீர்த்தி யிவைமுதலான துக்கங்களனுபவித்தது மின்னுமநேகம்பேர் துக்கமனுபவித்ததுஞ் சாத்திரங்களிற் கண்டிருக்கிறோமானபடியினாலு மிப்போதிருக்கிறபேர்களு மிந்தக்காமத்தினா லநேகதுக்க மனுபவிப்பதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினாலும், இனிப் பிறக்கப்போகிறபேர்களிடத்திலு மிந்தக்காமமிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலு மிந்தக்காமமுமூட்சுவானவர்கள் சர்வாத்மனாவிட்டுவிடவேண்டியதுசித்தம்.

வர்கள் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது சித்தம்.

இப்படியே புத்திர மித்திர களத்திரதனதானியா திசம்பத்துத் தனக்கேயுண்டு தனக்கொருத்தருஞ் சமானமில்லையென்று விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்குத் தர்ப்ப மென்று பேர் - இதைமுமூட்சு வானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற்சர்வாத்மனுவிட்டுவிடவேண்டியது.

ஏன்விட வேண்டியதென்றால் பூருவத்திற்சதகந்தரனனவன் ஐஸ்வரியத்திற் றனக்கொருத்தருஞ் சமானமில்லையென் றமரர்களுக்கு உபத்திரவஞ் செய்தை நாரதரிராமருக்கறிவிக்க வவர் பாரியானசீதையம்மனு லவன்பிராணஹானி பந்துநாச மிராச்சியஹானியிகபரங்களிலபகீர்த்தியிவைமுதலானவநேகவநர்த்தங்க ளனுபவித்தது மின்னு மிந்தத்தர்ப்பத்தினாலநேகம்பேர் துக்கமேயனுபவித்ததுஞ்சாத்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினாலும் - இப்போதிருக்கிறபேர்க ளிந்தத் தர்ப்பத்தினாற்றுக்கமேயனுபவிப்பதுபிரத்தியக்ஷமாகக்கண்டிருக்கிறபடியினாலும்இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலுமிந்தத்தர்ப்பமிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்க ளென்று தோற்றுகிற படியினாலு மிந்தத்தர்ப்ப முமூட்சுவானவர்கள் சர்வாத்மனு விட்டுவிட வேண்டியது சித்தம்-இப்படியே அடா யென்னைஅறியாயா - நான்பி

டித்தகாரியம்விடுவேனோநீயாவெனக்குப்புத்திசொ
ல்லுகிறவனென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்
ககங்காரமென்று பேர் - இதை முமூட்சு வானவர்க
ள்காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனாவிட்டுவி
டவேண்டியது.

ஏன் விடவேண்டிய தென்றால் பூருவத்தில்மதுகை
டவரென்பவர்கள் மகாவிஷ்ணுவோடு பதினாயிரம்வ
ருஷம் யுத்தஞ் செய்திளையாம லவர் வரங்களுக் காகி
யாமற் றாங்களந்த விஷ்ணுவுக்கு வரங்கொடுத்த வக
ங்காரத்தினாற் பிராணஹானி பந்துநாச மிராச்சிய
ஹானி யிகபரங்களிலபகீர்த்தி யிவைமுதலான வநே
கவநர்த்தங்க ளனுபவித்தது மின்னுமிந்த வகங்கார
த்தினா லநேகம்பேர் துக்கமனுபவித்ததுஞ் சாத்திர
ங்களிற்கண்டிருக்கிறோமானபடியினாலும் இப்போ
திருக்கிற பேர்களிந்த வகங்காரத்தினாற் றுக்கமே ய
னுபவிப்பது பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியி
னாலும் இனிப்பிறக்கப்போகிற பேர்களிடத்தி லிந்த
வகங்காரமிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்க ளெ
ன்றுதோற்றுகிற படியினாலு மிந்த வகங்கார முமூ
ட்சுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது
சித்தம் - இந்தராகமுதலகங்கார மீறான பதின்மூன்
றுகுணங்களினா லிராவணன் முதன்மதுகைடவா ளீ

ருனபேர்கள் மஹாசமர்த் தாளாயிருந் துமவர்கள்பி
ராணஹானி முதலானவநேக வநர்த்தங்கண் முன்ன
னுபவித்தது சாத்திரங்களிற் கண்டிருக்கிறோ மான
படியினாலு மிப்படியே சத்தியவர்த்தமான காலத்தி
லுமிந்தராகாதி குணங்களா லநேகசனங்கள்பிராண
ஹானிகளும் அநேகரோகங்களும்- அநேக திரவிய
நாசங்களும் - பந்துக்கள் விரோதங்களும் அபகீர்த்
திகளும் இவைமுதலான வநேகவநர்த்தங்களனுபவி
க்கிறது பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறோமானபடி
யினாலும் இனிப்பிறக்கப்போகிற பேர்களுமிந்தரா
காதி குணங்களினின்றும் விடுபடாமற் போனார்களா
கிலிப்படியே யநேகவநர்த்தங்களனுபவிப்பார்களெ
ன்று தோற்றப்படுகிற படியினாலும் இந்தராகாதிப
தின்மூன்று குணங்களு மோக்ஷ மார்க்கத்துக்குச்
சத்துருவாயிருக்கிற படியினாலும் சநநமரணப்பிர
வாகரூபமான நரகத்துக் கேதுவா யிருக்கிறபடியி
னாலும் இப்பதின்மூன்று குணங்களையு முமுட்சு வா
னவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்
இவைகளா லுண்டான சநநமரணமே நரகமென்ப
தா மிதற்குச்சமுசயமில்லை - சநநமரண ரூபமான
தேகமே நரகமென்பதற்குப் பிரமாணம் எங்கேசரீ
ரமுண்டோ வங்கே யெல்லாந் துக்கமுண்டு எங்கேசரீ
ரமில்லையோ வங்கே யெல்லாந் துக்கமில்லையென்

றுவேதத்திற் சொல்லியிருக்கிறபடியினு லிந்தச்சரீர
மே சகல துக்கங்களுக்குஞ்சகல வநர்த்தங்களுக்கு
மேதுவாக விருப்பதினு லிந்தச் சரீரமே நரகமெ
ன்றுசொன்னதுசித்தம்.

ஆதலாலிந்தச் சரீரத்துக்கேதுவான இப்பதின்மூ
ன்றுகுணங்களையு முமுட்சுவாயிருக்கப்பட்ட பேர்க
ளவசியம்விட்டுவிடவேண்டியதுசித்தம்.

இனிக் கொள்ளத்தக்கதுகளான விச்சைமுதன்மூ
ன்று குணங்களையு நிரூபிக்கிறோம் - அவை யாவன
யசிதாக நிமித்தமன்ன பானுதிகிராகியமுமலமூத்தி
ரவிசர்ச்சனமும் பண்ண வேண்டுமென்று வருகிற
த்தவிருத்திக் கிச்சையென்றுபேர் - இவை பண்ணு
மற்போனுற் றுக்கமும் பண்ணினுற் சுகமுமாயிருக்
குமிதனுற் பந்தமோக்ஷஞ் சுவர்க்கநரக மில்லையாது
லாற் கொள்ளத்தக்கதாம் - இப்படியே மகாதேவரி
டத்திற் பிரியம்வருகிற சித்தவிருத்திக்குப் பத்தியெ
ன்றுபேர் - குருவேதாந்த சாத்திரங்களின் மிகவும்
விசுவாசம் வைத்த சித்தவிருத்திக்குச் சிரத்தையெ
ன்றுபேர் - இந்தப்பத்திசிரத்தை முத்தியை யடை
விப்பதற் கேதுவாதலினுலும் பூருவத்திற்கட்டுவாங்
கனென்கிற மகாராஜனிந்தச் சிரத்தாபத் தியினுலி
ரண்டு நாழிகையின் முத்தியை யடைந்தா னென்று
சாத்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினுலுமு

முட்சுவானவர்களிந்தச் சிரத்தாபத்தியவசியம்பண்ணவேண்டியதுசித்தம் - இராகாதிபதினாறுகுணங்களுநிரூபிக்கப்பட்டது.

ராகத்துவேஷப்பிரகரணஞ்சம்பூரணம்.

இரண்டாவது

சாதனசதுஷ்டயப்பிரகரணம்.

முற்பிரகரணத்திற் கற்பனாரூபமான விஷயசுகங்களைப்பிரியமாக விசுவசித்ததிற் சுழலாநின்ற மனோவிருத்திக்கவைகடுன்பமெனத் தெரிவித்தவ் விருத்தியைவிஷய சுகங்களினின்று நீக்கிமேல்யதார்த்தசுகத்திற் பிரியம்வைக்கும்படிசெய் ததனாலுண்டான சிரத்தாபத்தியினாற்சித்தசுத்தியுண்டாக்கிப்பின்பவ்யதார்த்தம் வெளிப்படுதற்கேதுவான சாதன சதுஷ்டயப்பிரகரணநிரூபிக்கிறார்.

சுலோகம்.

చతుష్టయం సాధనానాం వేదాంతేషు ప్రతిష్ఠితం త
స్య స్వరూపం క్రమతస్తావత్తత్ర నిరూప్యతే ॥ ౪ ॥

(இதனதுபொருள்.)

வேதாந்தத்தினான்கு சாதனங்களதி காரிகளுக்காக

ச்சொல்லியிருக்கின்றது - அவைகளின்ஸ்வரூபங் கிர மத்தினிரூபிக்கப்படுகின்றது.

எந்தச் சாதனசதுஷ்டய சம்பத்தினுன் யாவரு ம் மோக்ஷமடைவார்களோ வந்தச் சாதன சதுஷ்ட ய சம்பத்தியை நிரூபிக் கிறோம் அவையாவன - நி த்தியா நித்திய வஸ்துவிவேகம் இகா முத்திரார்த்த பலபோக விராகம் - சமாதி சட்கசம்பத்தி - முமு ட்சுத்துவமென நான்குவிதமாம் - இவற்றில் நித்தி யா நித்தியவஸ்து விவேக மென்பது பிரமமே நித் தியவஸ்து சகத்தநித்திய வஸ்து வெனப்பகுத்தறிவ தாம்.

இச்சகமநித்தியமென்பதெப்படியென்றால்இவை பூதபவுதிகாத் மகமான படியினு லநித்தியமேயாம்- இங்ஙனம் பூதபவுதிகாத் மகமாகத் தோற்றப்படுகிற சகத்தின் முன்னே பவுதிகங்களுக் கநித்தியத்துவ நி ரூபிக்கிறோம்.

அப்பவுதிகமாவதியாதெனில் - நால்வகையோனி எழுவகைத்தோற்றம்- எண்பத்துநான்குலக்ஷம்-பே தங்களாயுள்ளசரீரங்களாம்.

அவற்றில்நால்வகையோனியென்பது - சராயுசம ண்டசஞ்சுவேதச முற்பிச மென்பனவாம்- இவற்றி ல்மையிற் கட்டுப்பட்டுப் பிறப்பது சராயுசமும் மு ட்டையிற் கட்டுப்பட்டுப் பிறப்பது - அண்டசமும்-

வியர்வை யிடமாகப் பிறப்பதுசுவேதசமும் - பூமி யிடமாகப்பிறப்பதுஉற்பிசமுமாம்.

எழுவகைத்தோற்றமென்பது - தேவருமமானிடரும் மிருகமும்பக்ஷிகளும் ஊர்வனவும் நீர்வாழ்வனவுந்தாபரங்களுமாம்.

எண்பத்து நான்குலக்ஷம் பேதமென்பது - தேவபேதம் பதினாலுலக்ஷமும்-மானிடபேதமொன்பதுலக்ஷமும், மிருகபேதம்பத்துலக்ஷமும்- பக்ஷிபேதம் பத்துலக்ஷமும்-ஊர்வனபேதம் பதினொருலக்ஷமும்-நீர்வாழ்வனபேதம் பத்துலக்ஷமும் - தாபரபேதம் பதினெட்டுலக்ஷமுமாம்.

இவற்றில்-தேவகந்தருவ சித்தசாத்திய கின்னரகிம்புருட குய்யகவித்தியாதர யக்ஷராக்ஷச பூதப்பிரேதபிசாச சாகினிடாகினி வேதாளாதியான தேவசரீரங்களும் மனுமாந்தாதி சக்கரவர்த்தி பிரமக்ஷத்திரிய வைசிய சூத்திரர்முதலான நரசரீரங்களும் காமதேனு சிம்மமுதலானமிருகசரீரங்களும், அன்னங் கருடன்முதலான பட்சிசரீரங்களும், சேடனெறும்புமுதலிய வூர்வனசரீரங்களும், மகரமச்சங்கூர்மமுதலிய நீர்வாழ்வனசரீரங்களும், கற்பகவிருக்ஷம் பாரிசாதமுதலிய தாபரசரீரங்களுமாம்.

பூருவத்திலித்தேவர்முதலிய வெண்பத்து நான்குலக்ஷம்பேதமாயுள்ள சரீரங்களும் நசித்துப்போன

து சாத்திரங்களிற் கண்டிருக்கிறோமானபடியினாலும் இப்படியே சத்தியவர்த்தமான காலத்திலுமிருக்கிற மாதாபிதாமுதலான சகலசரீரங்களும் நசிப்பது பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினாலும் இனிப் பிறக்கப்போகிற சகலசரீரங்களுமிப்படியேநசிக்குமென்று தோற்றப்படுகிறபடியினாலு மிந்தப்பவுதிகமான சகலசரீரங்களு மநித்தியமென்பதுசித்தம்.

இப்படியே பிருதிவியாதி பஞ்சபூதங்களுக்கு மநித்தியத்துவம் நிரூபிக்கிறோம்.

அஃதெப்படியென்றால் இப்பூதங்கள் பிறந்திருக்கிறபடியினாலும் அவயவிகளாயிருக்கிற படியினாலும் பிரளயகாலத்தினசித்துப்போகிறபடியினாலும்அநித்தியமேயாம்.

அவைகளெப்படிநசிக்கிறதென்றால்- பிரமப்பிரளயம்வருகிறகாலத்திற் பனிரெண்டுசூரியர்களு-முதயமாய் நூறுவருஷம்மழையில்லாமலெரித்துச் சகத்தெல்லாம்பஸ்பம்பண்ணிப் பூமியைத்தாங்கிக்கொண்டிருந்த வாதிசேடனுடைய மகுடங்களை பஸ்பம்பண்ணுகிறபோ தந்தவாதிசேடனுடைய முகங்களிலிருந்து காளகூடவிஷாக்கினி பிறந் தந்த விஷாக்கினியுஞ் சூரியாக்கினியுங்கூடி யந்தவாதிசேடன் முதற்றுவாதசாதித்தாளையும் பஸ்பம்பண்ணி யப்படிப் பஸ்பம்பண்ணின வக்கினியினின் றுஞ்சத்தமகாமே

கங்கள்பிறந்து நூறுவருஷம் யானைத்துதிக்கைபோல வருஷதாரைகள் வருஷிக்கும் அந்தவருஷசலமே காரணவடிவமாநிற்கும்-அந்தச்சலத்தில் அப்பூமி பஸ்மம் லீநமாகும்-அப்போதந்தச்சலம் வாயுஸ்தம்பமாநிற்கும் அப்படிநிற்கின்றசலத்தில் வடவானலம்பிறந்தந்தகாரணவடிவமானசலமெல்லாங்கிரகிக்கும். அவ்வடவாக்கினியும் பிரசண்டவாயுவில் லீநமாகும். அந்தவாயுவு மாகாசத்தில் லீநமாகும். அவ்வாகாசமுமஞ்ஞானத்தில் லீநமாகும். அவ்வஞ்ஞானமும் பிரமத்தில் லீநமாகும். அப்பிரமமொன்றுமே சேஷித்துநிற்கும் ஆனபடியினாற்பஞ்சபூதபவுதிகாத்மகமான சகத்தநித்தியமென்றுசொன்னதும்- இப்படிசேஷித்து நின்றபிரமத்துக்கு வேறேகாரணமில்லாதபடியாற்பிரமமேநித்தியமென்றுசொன்னதுஞ் சித்தம்.

இங்ஙன நித்தியாநித்தியவஸ்துக்களி னிச்சயந்தெரிதலாகிய முதற்சாதனங் கைவந்தாற் போதாதோவென்றாற் போதாது-ஏன் போதாதென்றாற் சிலவித்துவான்கள் சாஸ்திரபாண்டியத்தினா லாத்மாவொன்றுமே நித்தியமென்றுஞ் சகத்தநித்தியமென்றுஞ் சொல்லிக்கொண்டு ஸ்திரீபுத்திரதனதானியாதிபோகங்களி லிச்சைவைத்துக்கொண்டிருக்கிறதினா லநித்தியமானது நித்தியமென்றுவருமாதலா லிரண்டாஞ்சாதனமான விஷாமுத்திரார்த்த பலபோகவிராக

முஞ் சம்பாதிக்கவேண்டும்.

இவ்விகாமுத்திரார்த்தபலபோகவிராகமாவதியாதென்று லதையுநிரூபிக்கிறோம்.

அஃதாவது இகலோகவைராக்கியமென்றும் பரலோகவைராக்கியமென்று மிரண்டுவிதமாம்.

இவற்றிலிகலோகவைராக்கியமாவது ஸ்ரக்குசந்தன வநிதாதிவிஷயங்களில் வாந்தாசன மூத்திரபுரீஷங்களிலெப்படி யிச்சைவராதோ வப்படியிச்சைவராமற்போகிறது-இவ்விக வைராக்கிய மில்லாவிட்டா லிகத்திற் றான்சம்பாதிக்கவேண்டுமென்கிற புத்திரமித்திரகளத்திர பசுபிரத்திய பலபந்து கிரகக்கிராமக்ஷேத்திர தனதானியாதிகள் முதலியவற்றைச் சம்பாதிக்கவேண்டுமென்றான் மிகவும் பிரயாசசாத்தியமாயிருக்கிறபடியினாலும் பிரயாசப்பட் டெத்தனம்பண்ணி லப்படியெத்தனம்பண்ணின பதார்த்தங்களிற் சிறிதுகூடிவருகிறதுஞ் சிறிதுகூடிவராமலும் போகிறபடியினாலும் அப்படிக் கூடிவராத பதார்த்தத்தைத்தொட்டு வெகு துக்கபரம்பரைகள் வருகிறபடியினாலும் அந்தத் துக்கத்தோடு கூடிக்கொண்டிருக்கிறவேளையிற் பெரியோர்களாயிருக்கப்பட்ட பேர்கள்வந்தேதாகிலுஞ் சற்காரம்பண்ணவேண்டுமென்று கேட்டதுண்டானா லவர்கள்பேரில்

வாரா சமாதிஞானமுண்டாம், இந்த ஞானத்துவாரா மோக்ஷமடைவார்களாதலாற் புண்ணியகன்மங்களை நிஷ்காமமாயவசியஞ்செய்யவேண்டியது சித்தம்.

ஈஷணாத்திரயத்தியாகமாவது தனத்தினிடத்தும் புத்திரனிடத்துந்-தாரத்தினிடத்து மிருக்கின்ற விச்சையை நீக்குதலாம்.

இவ்விதமான வுபரதியை யவசியம்பண்ணவேண்டியது சித்தம்.

திதிக்ஷையாவது-சுகதுக்கங்கள்வரிற்பொறுத்திருத்தலாம். அஃதாவது, தான்சம்பாதித்திருக்கிற புத்திர மித்திர களத்திராதியான சகலபதார்த்தங்களுஞ் செவ்விதாயிருந்தாற்சுகம் அப்பதார்த்தங்களுக்கேகார்விக்கினம்வந்தாற்றுக்கம். இச்சுகதுக்கங்கள் லாபாலாபங்கள் மானாவமானங்கள் செயாபசெயங்கள் தன்னை யொருவர்வாதிக்கிற்றன் தண்டிப்பதிற்கதிகாரமிருந்தும் பொறுத்தலிவைமுதலானவைகளிற்சகித்திருப்பதாம்.

இத்திதிக்ஷைபண்ணமற்போனாலித்தொந்தங்களிலகப்பட்டநேகவநர்த்தங்களுமநேகபாவங்களுமநேகசாஞ்சல்யங்களுந் தேகசோஷணைகளும் பெரியோர்கள் சஹவாசத்துக்கு விக்கினங்களு மவர்கள் சொல்லும் வசனங்கள் மனதிற்றரியாமற்போகிறதுமிவைமுதலான தோஷங்களநேகமிருக்கிறபடியினு

விப்பொறுமை ரூபமாயிருக்கப்பட்ட திதிக்ஷையவசியம் பண்ணவேண்டியது சித்தம்.

சமாதானமாவது-சர்வேந்திரியங்களையுஞ்சிரவணத்தினிறுத்தல்அஃதாவதுபெரியோர்களிடத்திற்சேர்ந்துசிரவணம்பண்ணுகிறகாலத்தின் மனதுமிந்திரியங்களும் வாசனாவசத்திற்செல்லாமற்றிருப்பிச்சிரவணத்தின்பேரிலேகாக்கிரமாகநிறுத்துதலாம்.இதைப்பண்ணமற்போனாற்பெரியோர்கள்வசனிக்கும்வசனங்கள் மனதிற்பிடிபடாமல்விஷயங்களிற்சென்றுகொண்டிருக்கும் அதனாற் பெரியோர்கள் சொன்னதிற் பயனில்லாமற் றானினைத்திருக்கிற காரியமுமாகாமல் உபயப்பிரஷ்டத்துவம் வருமதனாலநேக துக்கப்பிராப்திகளுண்டா மதனால் மோக்ஷத்துக்கு விக்கினங்கள்வருகிறபடியினாலிச்சமாதானம் அவசியம் பண்ணவேண்டியது சித்தம்.

சிரத்தையாவது-பத்திவிசுவாசமெனவிரண்டாம்.

அவையாவன-தாய்தந்தைமுதலானவைகளிடத்திலிருக்கிற பிரியங்களெல்லாஞ் சற்குருவேதாந்த வாக்கியங்களிடத்தி லேகாக்கிரமாக வைப்பது விசுவாசமும் - ஈஸ்வரனிடத் தேகாக்கிரமாகவைப்பது பத்தியுமாம்.

இவற்றில் சற்குருவினிடத்தின் மிகவும் விசுவாச

ம்பண்ணவேண்டியது-என் பண்ணவேண்டியதென்றால் அவர்மகிமை முன்னதாக நிரூபிக்கிறோம்.

அஃதாவது, பிராந்திரகிதராயும் பரிபூரணராயும்-ஞானம் பத்தி வைராக்கியசம்பன்னராயும், நிரந்தரசந்தோஷத்தை யடைந்தவராயும், நித்தியதிருத்தியடைந்தவராயும், சச்சிதானந்தப்பிரமஸ்வரூபராயும், தேசகால வஸ்து பரிச்சேத ரகித ராயும், சுசாதி விசாதி சுகத பேத ரகிதராயும், சட்பாவ விகாரரகிதராயும், சுத்த புத்த முத்த நித்தியபரமானந்தஸ்வரூபராயும், சர்வ பரிபூரண கருணை சாகரராயும், நிருவியாச்சிய-நிர்லேப-நிர்ச்சங்க-நிர்வாண-நிஷ்காம-நிரூப-நிரந்தர - நிரவயவ - நிர்விசேஷானந்த-நிருபத்திரவ-நிபத்த-நிர்வேத்திய- நிர்க்குண-நிரஞ்சன-நிச்சல-நிஷ்பிரபஞ்சஸ்வரூபராயும்-அச்சேத்திய - அக்கிலேத்திய - அசோஷிய - அதாகிய-அசல-அவாச்சிய-அநாமய-அக்ஷர - அப்பிரமேய-அசிந்திய-அந்நியபாசிய-அக்குரோத-அவிதர்க்கிய அதிரிசிய - அநாசிரய-அநாதார - ஆநந்த - அகண்டாகாரஸ்வரூபராயும் - விசுவதைதச - பிராஞ்ஞைக்கதீதமான - பிரத்தியக்குசைதன்னியராயும்-விராட்டிரணியகர்ப்ப வவ்வியாகிருதங்களை யறிகின்ற சர்வசாக்ஷியராயும் - மூலப்பிரகிருதி யகண்டாகார விருத்தியானந்த விருத்தியதீதராயும் - கிருதகிருத்திய

ராயும் - ஸ்வரூபஞானமில்லாத மூடாள்மலமூத்திர
பாத்திரமா யிருக்கப்பட்டதேகமே - நானென்றிந்த
ச்சரீரத்தைக் குறித்துவந்த ஹானிவிருத்திகளும்சா
தி-வர்ணம் - குலம்- கோத்திரம்- ஆசிரமம் - நாமம்
வேஷமாதிகளும் - ஜநநமரணங்களும்- நானென்று
கொண்டிருக்கிறவாளாய் சங்கற்ப விகற்பமா யிருக்
கிறமனதை நானென்று கொண்டிருக்கிறவாளாய் உ
சுவாச நிசுவாசமா யிருக்கின்ற பிராணவாயுவை நா
னென்று கொண்டிருக்கிறவாளாய் ஆயாசமா யிருக்
கிறசீவனை நானென்று கொண்டிருக்கிறவாளாய் சச
விஷாணம்போலிருக்கிற சூனியமே நானென்று
கொண்டிருக்கிறவாளாய் இவை முதலானவநேகமத
தஸ்தர்களும்-திரிசியங்களாய் - பரிச்சின்னங்களாய்-
சாவயவங்களாய்-அனுர்தசடதுக்கரூபங்களாய் அஞ்
ஞானமுதலான தேகேந்திரிய பிராணபுத்தியே நா
னென்றுகொண்டிருக்கிறவாளாய் - லோககாமியாயி
ருக்கப்பட்டசீவனே நானென்றுகொண்டுகிஞ்சிக்ஞி
யாளாய்-சுத்தமூடசிரோமணியா யிருக்கிறபேர்கள்
கூட நிரோதுகமாய்-சற்குருவினுடைய வீக்ஷணியத்
துக்குப் பாத்திரமானார்களாகில் அவ்வீக்ஷண்யாநி
சயத்தினுற் சர்வகன்ம விமுத்தாளாய்- அவர்களிடத்
திற்சேருவார்கள்- அப்படிச்சேர்ந்தவர்களுடையபா
வங்களும் - ஜநநமரணரூபங்களாயிருக்கிற - சகலமி

ராந்திகளும்-சூனியம்பண்ணித் தங்களைப்போலக் கிருதகிருத்தியாளாய்ப்பண்ணுகிறவராயு மிருப்பதாம்

சுலோகம்.

బహవో గురవస్సంతిశిష్య విత్తాపహారకాః। దుర్లభోయంగురుర్దేవశిష్యహృత్తాపహారకః. [౫౮]

(இதனது பொருள்.)

சீடனது கைப்பொருள்பறிக்கும்படியானவாசாரியர் வெகுபேருண்டு- அச்சீடனது மனத்தின்கண்ணுள்ள துன்பத்தைப் பறிக்கும்படியான வாசாரியர் கிடைப்பதரிது.

இப்படிக்குச் சாஸ்திரங்களிற் பிரமாணங்களிருக்கிறபடியினாலு மிங்ஙனங் கிடைப்பதற்கரிய சற்குருவினிடத்தி னவசியமிகவும் விசுவாசம் வைக்கவேண்டியது சித்தம்.

இப்படியே வேதாந்தசாஸ்திரத்தினிடத்திலு மவசிய மிகவும் விசுவாசம்பண்ணவேண்டியது. என்பண்ணவேண்டியதென்றால்- வேதாந்தசாஸ்திரங்களிலு மகாமகிமைகளிருக்கின்றபடியினால் அம்மகிமை யென்னவென்றால்-அவ்வேதாந்தசாஸ்திரங்கள்சகல பிராந்திகளையுஞ் சூனியம்பண்ணுகிறதாயும் சநநமரணமென்கிற சம்சாரசாகரந்தாண்டுகிறதற்குத்தெப்பமாகியும் - ஸ்வகர்மகுணஜாலமென்கிற மேகங்க

ளைப்போக்கடிக்கிற பிரசண்டவாயுவாகியும் - ஆதி
யாத்மீக மாதிபவுதிக மாதிதெய்வீகமென்கிற தாப
த்திரயாக்கினிகளைச் சாந்திபண்ணுகிற அமிர்தவரு
ஷமாகியும்-புத்திர மித்திர களத்திர பசுப்பிரத்தியக்
கிரகக் கிராமக்ஷேத்திர தனதானியாதிகளிடத்திற் பி
ரியமோதப் பிரமோதமாயிருக்கின்றவஞ்ஞானமா
ன மோகாந்தகாரத்தைப் போக்கடிக்கிற சூரியப்பி
ரகாசமாகியும்-தானத்திரய-சங்கத்திரய-பந்தத்திர
ய-சீவத்திரய-சத்தித்திரய-விந்துத்திரய-தெய்வத்தி
ரய-ஈஷணாத்திரய-கர்மத்திரய-காரணத்திரய - வாச
னாத்திரய-மானவிவ்விலங்குகளைப் பேதிக்கிற வச்சி
ராயுதமாகியும்-இதரமான சப்தமீமாம்ச - மந்திர
கர்ம-யோக-நியாய-மிவைமுதலான சாத்திரங்கள்ப
டித்துஞ் சுகதுக்கமோக கர்மபந்தசநநமரணங்களை
நிரசனம்பண்ணமாட்டாமற் சமுசயங்களோடுகூடி
யநேகமயக்கங்களினான் மோக்ஷமாகிறகரையைக்கா
ணாமலு மிருக்கிறபேர்கள்கூடத் தெய்வாதீனமாய்
வேதாந்த சாத்திரசிரவணம்பண்ணினால் சகலசமு
சயங்களையுஞ் சகலபயதுக்க மோகாதிகளையுந் தள்ளி
மோக்ஷகதியைக் காண்பிக்கிறதாயிருக்கிற படியினா
லு மிந்த வேதாந்தசாத்திரங்களின்பேரில் மிகவும்
விசுவாசம்பண்ணவேண்டியது உசிதம்.

இப்படியே ஈஸ்வரனிடத்திலு மவசியமிகவும்பத்

ராந்திகளும்-சூனியம்பண்ணித் தங்களைப்போலக் கிருதகிருத்தியாளாய்ப்பண்ணுகிறவராயுமிருப்பதாம்

சுலோகம்.

బహవో గురవస్సంతిశిష్య విత్తాపహారకాః। దుర్లభోయంగురుర్దేవశిష్యహృత్తాపహారకః. [శ్లో]

(இதனது பொருள்.)

சீடனது கைப்பொருள்பறிக்கும்படியானவாசாரியர் வெகுபேருண்டு- அச்சீடனது மனத்தின்கண்ணுள்ள துன்பத்தைப் பறிக்கும்படியான வாசாரியர் கிடைப்பதரிது.

இப்படிக்குச் சாஸ்திரங்களிற் பிரமாணங்களிருக்கிறபடியினாலு மிங்ஙனங் கிடைப்பதற்கரிய சற்குருவினிடத்தி னவசியமிகவும் விசுவாசம் வைக்கவேண்டியது சித்தம்.

இப்படியே வேதாந்தசாஸ்திரத்தினிடத்திலு மவசிய மிகவும் விசுவாசம்பண்ணவேண்டியது. ஏன்பண்ணவேண்டியதென்றால்- வேதாந்தசாஸ்திரங்களிலு மகாமகிமைகளிருக்கின்றபடியினால் அம்மகிமையென்னவென்றால்-அவ்வேதாந்தசாஸ்திரங்கள்சகலபிராந்திகளையுஞ் சூனியம்பண்ணுகிறதாயும் சநநமரணமென்கிற சம்சாரசாகரந்தாண்டுகிறதற்குத்தெப்பமாகியும் - ஸ்வகர்மகுணஜாலமென்கிற மேகங்க

னைப்போக்கடிக்கிற பிரசண்டவாயுவாகியும் - ஆதி
யாத்மீகமாதிபவுதிகமாதிதெய்வீகமென்கிற தாப
த்திரயாக்கினிகளைச் சாந்திபண்ணுகிற அமிர்தவரு
ஷமாகியும்-புத்திர மித்திர களத்திர பசுப்பிரத்தியக்
கிரகக்கிராமக்ஷேத்திர தனதானியாதிகளிடத்திற் பி
ரியமோதப் பிரமோதமாயிருக்கின்றவஞ்ஞானமா
ன மோகாந்தகாரத்தைப் போக்கடிக்கிற சூரியப்பி
ரகாசமாகியும்-தானத்திரய-சங்கத்திரய-பந்தத்திர
ய-சீவத்திரய-சத்தித்திரய-விர்த்திரய-தெய்வத்தி
ரய-ஈஷணாத்திரய-கர்மத்திரய-காரணத்திரய - வாச
னாத்திரய-மானவிவ்விலங்குகளைப் பேதிக்கிற வச்சி
ராயுதமாகியும்-இதரமான சப்தமீமாம்ச - மந்திர
கர்ம-யோக-நியாய-மிவைமுதலான சாத்திரங்கள்ப
டித்துஞ் சுகதுக்கமோக கர்மபந்தசனநமரணங்களை
நிரசனம்பண்ணமாட்டாமற் சமுசயங்களோடுகூடி
யநேகமயக்கங்களினுன் மோக்ஷமாகிறகரையைக்கா
ணமலுமிருக்கிறபேர்கள்கூடத் தெய்வாதீனமாய்
வேதாந்த சாத்திர சிரவணம்பண்ணினால் சகல சமு
சயங்களையுஞ் சகலபயதுக்க மோகாதிகளையுந்தள்ளி
மோக்ஷகதியைக் காண்பிக்கிறதாயிருக்கிற படியினா
லுமிந்த வேதாந்தசாத்திரங்களின்பேரில் மிகவும்
விசுவாசம்பண்ணவேண்டியது நிச்சயம்.

இப்படியே ஈஸ்வரனிடத்திலு மவசியமிகவும்பத்தி

தியண்ணவேண்டியது-என் பண்ணவேண்டியதென்றால்சகலத்திற்குங்காரணராயும்-பாவமும்-கர்மமும், நாமமும்-ரூபமும்-குணங்களுமில்லாமல் உற்பத்தி-ஸ்திதி-லயம்-பண்ணுகிறநிமித்தம்-நிசமாயையினாற் ஜீவசகத்துக்களை விஸ்தரிக்கிறவராயும்- அச்ஜீவசகத்துக்களி லனுசூதராயும்-அவ்வியாகிருத மிரணியகர்ப்ப-விராட்டு-பிரமா-விஷ்ணு-மயேஸ்வர ராமகிருஷ்ணாதியவதாரராயும் - சற்குருரூபங்களாயுமிருக்கின்றபடியினா லந்தவீஸ்வரனைக்குறித்துச் சிரத்தாபத்தியோடும்-உபாசனைபண்ணினா லதனாலீஸ்வரானுக்கிரகமுண்டா யவ்வனுக்கிரகத்தினாற் சகலபாவங்களுநசித்து மோக்ஷத்தையடைகிறார்களாதலா லிந்தவீஸ்வரனிடத்தி லவசிய மிகவும்பத்திபண்ணவேண்டியது சித்தம்.

இப்படி குருவேதாந்தவாக்கிய மீஸ்வராளிடத்தின் மிகவும் விசுவாசம்பண்ணுமற்போனாற் சநநமரணப் பிரவாகரூபமான சம்சார துக்கமென்கிற நரகந்தப்பாமலும்அஞ்ஞானமும்-அவிவேகமும்-அபிமானமும்-ராககர்மசரீர துக்கபயாதிகளு மிவைமுதலான சகலபிராந்திகளுஞ் சூனியமாகாமலு மிருக்கின்றபடியினா லவசியம் சற்குருவேதாந்தவாக்கிய மீஸ்வரனிவர்களிடத்தின் மிகவுஞ்சிரத்தாபத்திபண்ணவேண்டியது சித்தம்.

இங்ஙனஞ் சமதமாதி குணங்களையுடைய சமாதிஷட்கசம்பத்தியான மூன்றாஞ்சாதனங் கைவந்தாற் போதாதோவென்றாற் போதாது-ஏன் போதாதென்றால், சிலர் தான் ஞானியெனவும், யோகியெனவும், குருக்களெனவும், பாரம்பரியமான பெரியோர்கள்வம்சத்திற் பிறந்தவனெனவுஞ் சொல்லிக்கொண்டு முன்னுள்ள மகான்கள்பேரை வைத்துக்கொண்டு அவர்கள் மகாமகிமையுள்ள குணாதிசயங்கள் தங்களுக்கிருக்கிறதுபோலச் சமதமாதிகளை வரவழைத்துக்கொண்டு நிர்வியாசமாகச் சாந்தாதிகுணங்களையடைந்து மோக்ஷமெப்போதுவருமென்கிற விசாரமில்லாமற் சோம்புமயக்கஞ் சமூசயமிவைகளையுடையவனாய்த் தேகசவுக்கியத்துக்காக வதற்குத்தகுந்த புசிப்பின் மிகவும் விருப்பமுள்ளவனாய் விசித்திரமார்க்கங்களை யப்பியாசித்துக்கொண்டு ஞானம்போலச் சிலவார்த்தைகளைக் கற்றுக்கொண்டு ஆத்மானந்தத்தையடையாமன் மூடசிரோமணியாயிருப்பார்களாதலால் நான்காஞ்சாதனமான முமூட்சுத்துவமும், அவசியஞ் சம்பாதிக்கவேண்டியது. அஃதாவது மோக்ஷவிருப்பமாம். அதையு நிரூபிக்கிறோம்.

ஜநநமரணப்பிரவாகரூபமான சமுத்திரத்திலிருக்கிறபேர் தாபத்திரயங்களி லடிபட்டழிந்தச் சம்சார

ம் மகா ரவுரவாதி நரகத்தைக்காட்டிலு மதிக துக்க
மாயிருக்கிறபடியினு லிச்சம்சாரத்தில் க்ஷணமாத்தி
ரமாகிலு மிருக்கலாகாதென்று மகாபயத்தையடை
ந்திப்படிப்பட்ட கோரமான சம்சாரபயதுக்கமோ
கப் பிரமைகளைப்போக்கடித்து நித்த - சுத்த-புத்த-
முத்த-சத்தியபரமானந்தாத்துவித சுகஸ்வரூபமா
யிருக்கப்பட்ட சாம்பிராச்சியத்தை எந்தப் பெரி
யோர்களா லடையலாகுமோ இப்படிப்பட்ட சற்
குருவெங்கேயிருக்கிறூரோ விதற்கென்னசாதனங்க
ள்வேண்டுமோவென்கிறவிசாரத்தோடுந் தலையினெ
ருப்புப்பற்றினவனுக்கும் - நாக்கு வரண்டுபோனவ
னுக்குந் தண்ணீரைக்கண்டாலொழிய வொருகாரிய
த்திலு மனதுமீளாததுபோல வெப்போமோக்ஷம்
வரப்போகிறதென் றெடுத்த விடாய்த்திரமற் கிருத
கிருத்தியனுமளவும் விசாரத்தினுற் றபித்துக்கொண்
டிருக்கிறதே முமுட்சுத்துவமென்றுசொல்லப்படும்.

இந்த முமுட்சுத்துவ மில்லாவிட்டாற் சநநமர
ணமென்கிற நரகம்விடாது பந்தமும் போகாதான
படியினுலே லெவ்விதத்திலு முமுட்சுத்துவம் சம்பாதி
க்கவேண்டியது சித்தம்.

இச்சாதனங்களுள்ளவனே பிரமவிசாரத்துக் கதி
காரியாவன்-அவ்விசாரமாவது-சடமின்னதென்றறி
ந்து அதை நீக்கிச் சத்தையறிகிறதற்குச் சற்குருத

ரிசனமாயவரிடத்தின்மகாவாக்கிய வுபதேசம்பெற்
றுக்கொண்டுவேதாந்தமகாவாக்கியார்த்தநிச்சயமா
னசீவபரவைக்கியநன்றாகவிசாரித்தவைகளொன்றா
னவனுபவமுண்டாகவிசாரிப்பதேவிசாரணையாம்.

அஃதுவேண்டுமென்பதற்குத் திட்டாந்தம் பசித்
தன்னம்வேண்டினவனுக்கதற்குச்சாதனமான இடம்
விறகுபாத்திரம்சலம்-அரிசி- இவைகளிருக்கினும் ப
சியைப்போக்கடிக்கமாட்டாது- இவைகளுடனேஅ
க்கினியொன்றுகூடினாலவ்வரிசியையன்னமாகப்பா
கம்பண்ணி அச்சாதனங்களுடனே தானுநட்டமாய்
ச் சாடராக்கினி ரூபமாயிருந்துக்கொண்டு முன்பா
கம்பண்ணினவன்னத்தைப்புசித்துப்பசி நீங்கியச்சா
டராக்கினியுந் திருத்தியாகாரமா யெப்படி சுகமாயி
ற்றேவப்படியே ஆத்மவிசாரமென்னு மக்கினிபிற
ந்து குருவென்கிறவிடத்தில்வியாபித்துவேதாந்தசா
த்திரமென்கிற விறகினாற் பிரகாசித்து மானிடசென்
மமென்கிற பாத்திரத்திற் சாந்தகுணமென்கிற சல
த்திற்சையோகமாய்அறிவென்கிறவரிசியைப் பாகம்
பண்ணி அவ்விசாராக்கினியு முன்னுள்ள சாதனங்க
ளோடுநட்டமாய்த்தான்சமைத்தபூரணமானவன்ன
த்தைப்புசித்துச்சனநமரணமென்கிறதுக்கமானபசி
நீங்கிதனக்கெதிரில்லாதவத்துவிதானந்ததிருத்தியை

அப்புவினிடத்தி லாகாசஞ் சித்தம், ஸ்தானம்நாபி அப்புவினிடத்தில் வாயு அபானவாயு - ஸ்தானங்குதம் அப்புவினிடத்தி லக்கினி சிகுவை யிந்திரியம்-ஸ்தானஞ் சிகுவை அப்புவினிடத்தி லப்புரசதன்மாத்திரை- அப்புவினிடத்திற் பிருதிவிகுய்யேந்திரியம் ஸ்தானம் குய்யம்.

இதற்குச் சுலோகம்.

చిత్తంచాపానవాయుశ్చ జిహ్వారసన మేవచ।గుహ్యం
పంచవిధః ప్రోక్తః ఇత్యేతజ్జలపంచకం [౧౪]

இதனதுபொருள்.

இந்தச் சித்தம் அபானவாயு சிகுவையிந்திரியம் ரசவிஷயம்-குய்யேந்திரியம் ஆகவைந்தும் அப்புபஞ்சீகிருதி,

அக்கினியினிடத்தி லாகாசம்புத்தி-ஸ்தானம்நேத்திரம், அக்கினியினிடத்தில் வாயு உதானவாயு, ஸ்தானங்கண்டம், அக்கினியினிடத்தி லக்கினிநேத்திரேந்திரியம், ஸ்தானம்நேத்திரம் அக்கினியினிடத்திலப்பு ரூபதன்மாத்திரை, அக்கினியினிடத்திற் பிருதிவிபாதேந்திரியம் ஸ்தானம்பாதம்.

இதற்குச்சுலோகம்.

బుద్ధిశ్చోదానవాయుశ్చ నేత్రంరూపంతథైవచ।పా
ణిఃపంచ్చవిధః ప్రోక్తః ఇత్యేతద్వహ్నిపంచకం [౧౫]

இதனதுபொருள்.

இந்தப்புத்தி உதானவாயு நேத்திரேந்திரியம் ரூபவிஷயம் பாதேந்திரியம் ஆகவைந்தும் அக்கினி பஞ்சிகிருதி.

வாயுவினிடத்தி லாகாசம் மனது - ஸ்தானங் கண்டம் வாயுவினிடத்தில் வாயுவியானவாயு- ஸ்தானம்- சர்வசரீரம்- வாயுவினிடத்தி லக்கினி தொக்கேந்திரியம் ஸ்தானந்தொக்கு- வாயுவினிடத்தி லப்புபரிசதன்மாத்திரை- வாயுவினிடத்திற் பிருதிவி பாணீந்திரியம் ஸ்தானம்-அஸ்தம்.

இதற்குச்சுலோகம்.

మానసం వ్యాన వాయుశ్చ చక్షుః స్పర్శనస్తథా పచ్ఛ

పాదః పంచవిధః ప్రోక్తః ఇత్యేతద్వాయుపంచకం॥

இதனதுபொருள்.

இந்தமனது வியானவாயு தொக்கேந்திரியம் பரிசவிஷயம் பாணீந்திரியம் ஆகவிந்தவைந்தும் வாயு பஞ்சிகிருதி.

ஆகாசத்தினிடத்திலாகாசம் ஞானம் ஸ்தானம் புருவமத்தியம்- ஆகாசத்தினிடத்தில் வாயுசமானவாயு ஸ்தானம் நாபி- ஆகாசத்தினிடத்தி லக்கினி சுரோத்திரேந்திரியம் - ஸ்தானஞ்செவி-ஆகாசத்தினிடத்

திலப்புசத்ததன்மாத்திரை - ஆகாசத்தினிடத்திற் பி
றுதிவிவாகித்திரியம் - ஸ்தானம்வாக்கு.

இதற்குச் சுலோகம்.

జ్ఞానంసమాన వాయుశ్చ శ్రోత్రంశ బ్దస్తథైవచ।
వాక్చపంచవిధః ప్రోక్తః ఇత్యేతద్వ్యోమపంచకం॥

இதனது பொருள்.

இந்தஞானம் சமானவாயு சுரோத்திரேந்திரியம் சத்தவிஷயம்வாகிந்திரியம் ஆகவிந்தவைந்துமாகாச பஞ்சிகிருதி.

இந்தவிந்திரியங்களிருக்கிறஸ்தானமான தூலசரீரம்பஞ்சிகிருதபஞ்சமகாபூதங்களிலானது இதற்குச்சம்மதிவசனம்

சுலோகம்

పంచీకృతమహాభూత సంభవంకర్మ సంచితం।
శరీరం సుఖదుఃఖానాం భోగాయతనముచ్యతే॥

இதனது பொருள்.

பஞ்சிகிருத பஞ்சமகாபூதத்தினின்று முண்டாகியும் கர்மசஞ்சிதமாயும் சுகதுக்கங்களுக் கிடமாயுமிருக்கின்றது தூலசரீரமென்றாசாரிய சுவாமிகளாத்மபோதமென்கிற கிரந்தத்தில் நிரூபித்திருக்கிறாரான

திலப்புசத்ததன்மாத்திரை - ஆகாசத்தினிடத்திற் பி
ருதிவிவாகிந்திரியம் - ஸ்தானம்வாக்கு.

இதற்குச் சுலோகம்.

జ్ఞానంసమాన వాయుశ్చ శ్రోత్రంశబ్దస్తథైవచ।
వాక్చపంచవిధః ప్రోక్తః ఇత్యేతద్వ్యోమపంచకం॥

இதனதுபொருள்.

இந்தஞானம் சமானவாயு சுரோத்திரேந்திரியம் சத்விஷயம்வாகிந்திரியம் ஆகவிந்தவைந்துமாகாச பஞ்சிகிருதி.

இந்தவிந்திரியங்களிருக்கிறஸ்தானமான தூலசரீரம்பஞ்சிகிருதபஞ்சமகாபூதங்களினாலானது இதற்குச்சம்மதிவசனம்

சுலோகம்

పంచీకృతమహాభూత సంభవంకర్మసంచితం।
శరీరంసుఖదుఃఖానాం భోగాయతనముచ్యతే॥

இதனதுபொருள்.

பஞ்சிகிருத பஞ்சமகாபூதத்தினின்று முண்டாகியும் கர்மசஞ்சிதமாயும் சுகதுக்கங்களுக் கிடமாயுமிருக்கின்றதுதூலசரீரமென்றுசாரிய சுவாமிகளாத்மபோதமென்கிற கிரந்தத்தில் நிரூபித்திருக்கிறாரான

னும் போனுல்தான் போகவேண்டுமே இந்த வைந்தும் போனாலுந்தான் போகவில்லையே-ஆகையாலிந்தவைந்துக்குஞ் சாட்சியாயறிகிறவறிவேதான்.

இப்படியேபசிதாகம் நித்திரைஆலஸ்யம்சங்கமம் இந்தவைந்தையுமறிந்தவறிவேதான்-தன்னுலறியப்பட்ட விந்தவைந்துந் தன்னை யறியமாட்டா தாகையாற்சடம்.

இந்தவைந்துந்தானல்ல இந்த வைந்து மக்கினியினம்சமாம்- இந்தவைந்தினுடைய ஹானிவிருத்திகளினுல் வருகிற சுகதுக்கங்கள் தனக்கில்லை இந்தவைந்துமே தானுனு லிந்தவைந்தும்போனுற்றான் போகவேண்டுமே இந்த வைந்தும் போனாலுந் தான் போகவில்லையே ஆகையா லிந்தவைந்துக்குஞ் சாட்சியாயறிகிறவறிவேதான்.

இப்படியே கிடத்தல் நடத்தல் இருத்தல் ஓடல்தந்தல் இந்தவைந்தையுமறிந்த வறிவேதான்-தன்னுலறியப்பட்ட விந்தவைந்துந் தன்னையறியமாட்டாதாகையாற்சடம்-இந்தவைந்துந் தானல்ல விந்தவைந்தும் வாயுவினம்சமாம்-இந்த வைந்தினுடைய ஹானிவிருத்திகளினுல் வருகிறசுகதுக்கங்கள்தனக்கில்லை இந்தவைந்துந் தானுனு லிந்த வைந்தும் போனுற்றுன் போகவேண்டுமே இந்தவைந்தும் போனாலுந்

தான்போகவில்லையே ஆனபடியினு லிந்தவைந்துக்குஞ் சாட்சியாயறிகிறவறிவேதான்.

இப்படியேஆசைதுவேஷம் பயம்வெட்கம் மோகம் இவ்வைந்தையுமறிந்த வறிவேதான் தன்னாலறியப்பட்ட விந்தவைந்துந் தன்னை யறியமாட்டாதாகையாற்சடம். இந்தவைந்துந்தானல்ல விந்தவைந்து மாகாசத்தினம்சமாம்.

இந்தவைந்தினுடைய ஹானிவிருத்திகளினுல்வருகிறசுகதுக்கங்கள் தனக்கில்லை - இந்த வைந்துந்தானு லிந்த வைந்தும் போனாற்றான் போகவேண்டுமேஇந்தவைந்தும்போனாலுந்தான்போகவில்லையே ஆனபடியா லிந்த வைந்துக்குஞ் சாட்சியா யறிகிற வறிவேதான்.

இந்தபிருதிவிபஞ்சகமும் அப்புபஞ்சகமும் அக்கினிபஞ்சகமும் வாயுபஞ்சகமும் ஆகாச பஞ்சகமுமாகியவிவ்வைந்துபஞ்சகங்களுங்கூடித்தூலசரீரமாச்சுது.

இதைத்தூலசரீரமென்றறிந்தவறிவேதான் தன்னாலறியப்பட்ட விந்தத் தூலசரீரந்தன்னை யறியமாட்டாதாகையாற்சடம் இந்தத் தூலசரீரந்தானல்ல விந்தத்தூலசரீரம்பஞ்சிகிருத பஞ்சமகாபூதங்களினுலானது இந்தத்தூலசரீரத்தினுடையஹானிவிருத்திகளினுல்வருகிறசுகதுக்கங்கள்தனக்கில்லை - இந்தத் தூலசரீ

ரமேதானு விந்தத்தூலசரீரம் போனுற்றன் போகவேண்டுமே இந்தத் தூலசரீரம் போனுலுந்தான் போகவில்லையேஎப்படித்தான்போகவில்லையென்னிற்பூருவத்திற்றன்சரீரத்தோடேயிருந்து பண்ணினகருமத்தினுற்றனக்கிந்தச்சரீரம்வந்ததென்றும்இந்தச் சரீரத்தினுற்பண்ணினகருமத்தினுற்றனக்கினிமேற்சரீரம்வரப்போகிறதென்று மிந்தச் சரீரத்துக்குவிலட்சணமானதன்னையறிந்தாற்றனக்கினிமேற்சரீரம்வராதென்றுமனுபவமிருக்கின்றபடியாற்பூதபவிஷ்யவர்த்தமானகாலத்திரயங்களிலுமிந்தச்சரீரமிருந்தாலும்போனுலுந்தான்போகவில்லையே ஆனபடியினுலிந்தவியஷ்டி தூலசரீரந்தானல்ல இந்தவியஷ்டி தூலசரீரத்துக்குச் சாட்சியாயறிகிறவறிவேதான் இதற்குச்சம்மதிவசனம்.

சுலோகம்

నత్వేవాహం జాతునాసంనత్వం నేమేజనాధిపాః। న
చైవనభవిష్యామస్సర్వేవయమతఃపరం॥ [௧௯]

இதனது பொருள்.

நானொருக்காலுமில்லாமலிருந்தவனல்ல நீயுமிராமலிருந்தவனல்ல - இந்தவிராசாக்களுமிராமலிருந்தவர்களல்ல நாமெல்லாருமேலில்லாமற்போகிறவர்களுமல்லவென்றுகீதையிற்பகவானிருபித்திருக்கிறார்

சுலோகம்.

ఘటద్రష్టా ఘటాద్భిన్నః సర్వదా న ఘటో యథా ॥
దేహద్రష్టా తథా దేహో నాహమిత్యవధారయ [౨౦]

இதனதுபொருள்.

கடத்தைக்காண்கிறவன் கடத்துக்குவேறாய்க்கடமாகாததுபோலத்தேகத்தைக் காண்கிறதானுந்தேகமல்லவென்றறிக- என்றாசாரியசுவாமிகள்வாக்கியவிருத்தியென்கிற கிரந்தத்திலேநிரூபித்திருக்கிறா ரானபடியினாலிதுவேப்ரமாணசித்தம்.

இந்தவியஷ்டி தூலசரீரத்துக்குச் சாட்சியானதானேபிரமாதிபிபிலிகாந்தமான சமஷ்டி தூலசரீரங்களிலும் பஞ்சீகிருத பஞ்சமகாபூதங்களென்கிற தூலபூதங்களிலு மனுசூதமாயிருந்துக்கொண்டுசாட்சியாயறிகிற படியினா லிந்தச்சமஷ்டி தூலசரீரங்களுக் காரணமான பஞ்சீகிருதபஞ்சமகா பூதங்களென்கிற தூலபூதங்களுந்தானல்ல- எப்படித்தானல்லவென்னிற்றமக்கெதிரோதோற்றுகிறசமஷ்டிவியஷ்டியாத்மகமான தூலசரீரங்களிடத்திலு மிதற்குக்காரணமான பஞ்சீகிருதபஞ்சமகாபூதங்களென்கிற தூலபூதங்களிடத்திலும் அந்நியஸ்தமாய்த்தோற்றுகிறவிசுவன் வியாவகாரிகனும் விராட்டு வைஸ்வானரனுமென்கின்றவபிமான நாமங்களும்-சாக்கிராவஸ்தையும்-

நேத்திரஸ்தானமும் -யுத்தம்போகமும் அகாரமாத்தி
ரையும்-ரஜோகுணமும்கிரியாசத்தியும்பிரமமூர்த்தி
யும் அன்னமயகோசமும் - ஜீவத்துவமும்மனுஷியத்
துவமும்-நான்கர்ப்பஸ்தனாகப்பிறந்தவன் நான்பால
ன் நான்குமாரன் நான்யுவன் நான்விருத்தன் நான்சீ
ரணித்துப்போகிறவனென்னுமிச்சட்பாவவிகாரங்க
ளும்சடாதாரமென்கிறநாமங்களும் லக்ஷியத்திரயங்
கமென்கிறநாமங்களும் நான்புருஷன்நான்ஸ்திரீநபு
ம்ஸகனென்கிறலிங்கத்துவமும்நான்பிராமணன்நான்
க்ஷத்திரியன் நான்வைசியன்-நான்சூத்திரனென்கிற
வர்ணத்துவமும்-நான்தமிழன்-நான்தெலுங்கன்-நா
ன்கர்னடன்-நான்மாராஷ்டகன் நான் குச்சரனென்
கிறபஞ்சத்ராவிடங்களும் - நான்காசிப கோத்திரம்-
நான்பரத்வாசகோத்திரம்-நான்போதாயனசூத்திர
ம்-நான் ஆசிலாயனசூத்திரம்-நான் ஆபஸ்தம்பசூத்
திரம்-நான் காத்தியாயனசூத்திரமென்கிற கோத்திர
சூத்திரங்களும்-நான்பிரமசாரி-நான்கிரகஸ்தன்- நா
ன்வானப்பிரஸ்தன் நான்- சந்நியாசியென்கிற ஆசிர
மங்களும் நான்கிருஷ்ணன்-நான்ராமன் நான் எல்ல
ம்பட்டன் நான் குட்டாபட்டனென்கிற குறிநாமங்க
ளும்நான்கறுத்தவன்நான்சிவத்தவனென்கிறரூபங்க
ளும் நான்தீக்ஷிதன்-நான்சோமயாகி நான்டஹுாவி
தயாகி-நான்பவுண்டரீகயாகி-என்கிறசமஸ்கார நா

மங்களும்-நான்மாயாவாதி-நான்தத்துவவாதியென்
கிறமதநாமங்களும்-நான்வாத்தியார்-நான்கர்மடன்
நான்பத்தன்- நான்ஞானி - நான்கலியாணப்பிள்ளை
யென்கிறவாசாரநாமங்களும்-நான் தச்சன்-நான்த
ட்டான்நான்கொல்லன்- நான்குசவன்-நான்அம்பட்
டன்-நான்வண்ணான்-நான்இடையனென்கிறவிருத்தி
நாமங்களும்-நான் கூலிக்காரன்-நான்காஸ்தாரி-நா
ன்மாவுத்தன்-நான்மணிபகாரன்-நான்கணக்கப்பிள்
ளையென்கிறகிரியாநாமங்களுமானமனுடநாமங்களு
ம்-பிர்மாவிஷ்ணுமயேஸ்வரன்சூரியன் நட்சத்திரம்
தேவகந்தருவசித்தசாத்தியகின்னரகிம்புருஷகுய்யக
அப்ஸரவித்தியாதர யக்ஷராக்ஷச பூதப்பிரேதபிசாச
சாகினிடாகினிவேதாளாதிதர்ம்பிர மிருண்மயசிலா
தாருரூபங்களென்கிற தேவநாமத்துவமும் கோஇட
பஅசுவகார்த்தபசிங்கசார்த்தூலசுவானமார்ச்சால்மர்
க்கடாதி மிருகநாமங்களும்கருடன்மசகமாதிபக்ஷிநா
மங்களும் பன்னகாதி ஊர்வனநாமங்களும்-மச்சகூர்
மாதிநீர்வாழ்வன நாமங்களும் கற்பகம்- மந்தாரம்
பாரிசாதம்-நாளிகேரம்-தாளி- அசுவத்தாதி விருக்ஷ
நாமங்களும்-மகாமேருசித்திரகூடம் திரிகூடம்சத்த
குலபர்வதாதிபர்வதநாமங்களும் - சுவர்க்கமத்தியபா
தாளாதிசதுர்த்தசபுவனங்களும் நவகண்டஞ்சத்தத்

இதனது பொருள்.

சச்சிதானந்த ஸ்வரூபமான தன்னிடத்தி லாரோபிக்கப்பட்டது சூட்சுமசரீரம். அதின்ஸ்வரூபம்நிரூபிக்கப்படுகின்றது.

அஃதெப்படியென்னில் சத்ததன்மாத்திரைசாத்விகாம்சஞ் சமஷ்டியிற் கூடினது ஞானம்- சத்ததன்மாத்திரை ரசோம்சஞ் சமஷ்டியிற் கூடினது சமானவாயு-சத்ததன்மாத்திரைவியஷ்டி சாத்விகாம்சஞ் சுரோத்திரேந்திரியம்- சத்ததன்மாத்திரை விஷயம், சத்ததன்மாத்திரை வியஷ்டி ரசோம்சம்- வாகிந்திரியம்- இந்தஞானம்சமானவாயு சுரோத்திரியஞ் சத்தவிஷயம், வாகிந்திரியம், இந்தவைந்துஞ் சத்ததன்மாத்திரையைத் தவிரவில்லை.- பரிசதன்மாத்திரை சாத்விகாம்சஞ் சமஷ்டியிற் கூடினது மனது- பரிசதன்மாத்திரை ரசோம்சஞ் சமஷ்டியிற்கூடினது வியானவாயு.- பரிசதன்மாத்திரை வியஷ்டி சாத்விகாம்சந் தொக்கேந்திரியம்.- பரிசதன்மாத்திரை விஷயம்-பரிசதன்மாத்திரை வியஷ்டி-ரசோம்சம்பாணீந்திரியம்-இந்தமனது வியானவாயு தொக்கேந்திரியம் பரிசவிஷயம்பாணீந்திரியம்இந்தவைந்தும்பரிசதன்மாத்திரையைத்தவிரவில்லை. ரூபதன்மாத்திரை சாத்விகாம்சஞ்சமஷ்டியிற் கூடினதுபுத்திரூபதன்மாத்திராரசோம்சஞ்சமஷ்டியிற்கூடினது உதான

வாயு - ரூபதன்மாத்திரை வியஷ்டி சாத்விகாம்சம் நேத்திரேந்திரியம் ரூபதன்மாத்திரைவிஷயம்- ரூபதன்மாத்திரை வியஷ்டி ரசோம்சம் பாதேந்திரியம் இந்தப்புத்தி உதானவாயு நேத்திரேந்திரியம் - ரூபவிஷயம் பாதேந்திரிய மிந்தவைந்தும் ரூபதன்மாத்திரையைத்தவிரவில்லை - ரசதன்மாத்திரை சாத்விகாம்சஞ் சமஷ்டியிற்கூடினது சித்தம்.

ரசதன்மாத்திரை ரசோம்சஞ் சமஷ்டியிற் கூடினது அபானவாயு-ரசதன்மாத்திரை வியஷ்டிரசோம்சஞ் சிகுவேந்திரியம் ரசதன்மாத்திரை விஷயம்- ரசதன்மாத்திரை வியஷ்டி ரசோம்சங் குய்யேந்திரியம்-இந்தச்சித்தம் அபானவாயு சிகுவேந்திரியம் ரசவிஷயங் குய்யேந்திரியம் இந்தவைந்தும்ரசதன்மாத்திரையைத்தவிரவில்லை - கந்ததன்மாத்திரை சாத்விகாம்சஞ் சமஷ்டியிற்கூடினது அகங்காரம்- கந்ததன்மாத்திரை ரசோம்சஞ் சமஷ்டியிற் கூடினது பிராணவாயு-கந்ததன்மாத்திரை வியஷ்டி சாத்விகாம்சங் கிராணேந்திரியங் - கந்ததன்மாத்திரை விஷயம் கந்ததன்மாத்திரைவியஷ்டி ரசோம்சங் குதேந்திரியம் - இந்த வகங்காரம் பிராணவாயு - கிராணேந்திரியம் - கந்தவிஷயம் - குதேந்திரிய மிந்தவைந்துங் கந்ததன்மாத்திரையைத் தவிரவில்லை - இந்த

வாக்காதி கன்மேந்திரியங்களைந்தும், சத்தாதி விஷ
யங்களைந்தும், சுரோத்திராதி ஞானேந்திரியங்களை
ந்தும், பிராணாதி வாயுக்களைந்தும், ஞானம் நீங்க
லாக மனாதியந்தக்கரணங்கணான்குமாக விந்த விரு
பத்துநாலுங்கூடிச் சூட்சுமசரீரமாச்சு - இதற்குச்
சம்மதிவசனம்.

சுலோகம்

పంచప్రాణమనోబుదిదశేంద్రియసమన్వితం। అ
పంచీకృతభూతోద్ధసూక్ష్మాంగ్గ భోగసాధనం॥ [௧௨]

இதனதுபொருள்.

பஞ்சப்பிராணனும் மனமும் புத்தியும் ஞானேந்
திரியங்களுங் கன்மேந்திரியங்களுஞ் சூட்சுமசரீர
மென்றுபேர். இப்படிஆசாரியசுவாமிகளாத்மபோ
தமென்கிற கிரந்தத்தினிருபித்திருக்கிறானபடியி
னாலிதுவே பிரமாணசித்தம்.

ஆனாலாசாரியசுவாமிகளாத்மபோதமென்கிறகி
ரந்தத்திற் சூட்சுமசரீரம் பதினேழுதத்துவமென்று
நிருபித்திருக்க, இருபத்துநான்குதத்துவமென்றெ
ப்படிச்சொல்லப்படுமென்றால்- மனதிற்சித்தத்தை
யும் புத்தியிலகங்காரத்தையுமடக்கிப் பஞ்சவிஷயங்
களையுநீக்கிப் பதினேழாகக் கூறினார்-யாமிந்தச்சித்த
மகங்காரமிவைகளின் குணம் வெவ்வேறாயிருக்கி

ன்றபடியினு லிவ்விரண்டையுஞ் சூட்சுமசரீரத்துக் குக் காரணமான பஞ்சதன்மாத்திரைவிஷயரூபமாகத் தோற்றுகிறபடியினு லிந்த விஷய ரூப மாகத் தோன்றுகிற பஞ்சதன்மாத்திரைகளைத் தவிரச் சூட்சுமசரீர மிராதானபடியினு லிந்த விஷயங்களைத்தையுமாகமேவமையுங்கூட்டிச் சூட்சுமசரீரமிருபத் துநாலென்று சொன்னது சித்தம்.

இப்படியே தன்னிடத்தி லத்தியஸ்தமாய்த்தோற்றுகிற பஞ்சதன்மாத்திரையினுலானவிந்தச் சூட்சுமசரீரந்தானல்ல இந்தச் சூட்சுமசரீரத்தையறிந்தஞானமேதான் அஃதெப்படியென்னில் வாக்குப், பாணீ பாதம், குய்யம், குதங்களென்கிற கன்மேந்திரியங்களுக்கு வசன-தான-கமன-ஆனந்த- விசாக்கமான விஷயங்களுண்டாயிருந்தாலும் - இந்தச் சுரோத்திரேந்திரியஞ் சத்தவிஷயத்தினுல் வாகிந்திரியத்துக்கறிகிறது தன்னுலறியப்பட்ட விந்தவாகிந்திரியந் தன்னையறியமாட்டாதாகையாற்சடம் - இந்த வாகிந்திரியந்தானல்ல - இவ்வாகிந்திரியஞ் சத்ததன்மாத்திரை வியஷ்டி சாத்விகாம்சத்தினு லானது இதன் ஹானிவிருத்திகளினுல் வருகிற சுகதுக்கங்களெனக்கில்லை - இந்த வாகிந்திரியந்தானுனுல் இந்த வாகிந்திரியம் போனுற்றுன்போகவேணுமே, இந்த வாகிந்திரியம் போனாலும் தானப்படிப் போகவில்லையே

ஆகையாலிந்த வாகிந்திரியத்துக்குச் சாக்ஷியாயறிந்தசுரோத்திரேந்திரியமேதான் - இப்படியே தொக்கேந்திரியம் பரிசவிஷயத்தினாற் பாணீந்திரியத்துக்கறிகிறது - தன்னா லறியப்பட்ட விந்த பாணீந்திரியம் தன்னை யறியமாட்டா தாகையாற் சடம், --- இந்தப் பாணீந்திரியந் தானல்ல இந்தப்பாணீந்திரியம் பரிசதன்மாத்திரை, வியஷ்டி ரசோம்சத்தினாலானது இந்தப் பாணீந்திரியத்தினுடைய ஹானிவிருத்திகளினால் வருகிற சுகதுக்கங்க டனக்கில்லை - இந்தப் பாணீந்திரியமே தானா விந்தப் பாணீந்திரியம் போனாற்றான்போகவேண்டுமே இந்தப் பாணீந்திரியம்போனாலுந் தான்போகவில்லையே - ஆகையினாலிப்பாணீந்திரியத்துக்குச் சாக்ஷியாயறிந்த தொக்கேந்திரியமே தான் இப்படி நேத்திரேந்திரியம் ரூபதன்மாத்திரையினாற் பாதேந்திரியத்துக்கறிகிறது. தன்னாலறியப்பட்ட பாதேந்திரியந் தன்னையறியமாட்டாதாகையாற் சடம், --- இந்தப் பாதேந்திரியந்தானல்ல - இந்தப் பாதேந்திரியம் ரூபதன்மாத்திரை, வியஷ்டி, ரசோம்சத்தினாலானது இந்தப் பாதேந்திரியத்தினுடைய ஹானிவிருத்திகளினால் வருகிற சுகதுக்கங்கடனக்கில்லை - இந்தப் பாதேந்திரியமே தானா விந்தப்பாதேந்திரியம்போனாற்றான்போகவேண்டுமே - இந்தப் பாதேந்திரியம் போனாலுந்தான்

போகவில்லையே - ஆனபடியினு லிந்தப்பாதேந்திரி யத்துக்குச் சாக்ஷியாயறிந்த நேத்திரோந்திரியமே தான். இப்படியே சிகுவேந்திரியம் ரசவிஷயத்தி ஞற் குய்யேந்திரியத்தை யறிகிறது-தன்னுலறியப்ப ட்ட குய்யேந்திரியந் தன்னை யறியமாட்டா தாகை யாற் சடம், --- இந்தக் குய்யேந்திரியந் தானல்ல- இந்தக் குய்யேந்திரியம் ரசதன்மாத்திரை, விய ஷ்டி, ரசோம்சத்துனுலானது - இந்தக் குய்யேந்தி ரியத்தினுடைய ஹானிவிருத்திகளினுல் வருகிற சுக துக்கங்கடனக்கில்லை இந்தக்குய்யேந்திரியமே தானு ஞு லிந்தக்குய்யேந்திரியம்போனுற்றுன் போகவே ண்டுமே - இந்தக் குய்யேந்திரியம் போனுலுந் தா ன்போகவில்லையே - ஆனபடியினு லிக்குய்யேந்திரி யத்துக்குச் சாக்ஷியாயறிந்த சிகுவேந்திரியமே தா ன் - இப்படியே கிராணேந்திரியங் கந்ததன்மாத்தி ரையினுற் குதேந்திரியத்தையறிகிறது - தன்னுலறி யப்பட்டகுதேந்திரியந்தன்னையறியமாட்டாதாகை யாற் சடம் --இந்தக்குதேந்திரியந்தானல்ல - இந்தக் குதேந்திரியங் கந்ததன்மாத்திரை, வியஷ்டி, ரசோ ம்சத்தினுலானது - இந்தக் குதேந்திரியத்தினுடைய ஹானிவிருத்திகளினுல் வருகிற சுகதுக்கங்கடனக்கி ல்லை-இந்தக்குதேந்திரியமே தானுஞு லிந்தக் குதே ந்திரியம் போனுற்றுன் போகவேண்டுமே- இந்தக்

குதேந்திரியம் போனாலுந் தான் போகவில்லையே-ஆனபடியினாலிந்தக் குதேந்திரியத்துக்குச் சாக்ஷியாயறிந்த கிராணேந்திரியமேதான்-இந்தச் சுரோத்திரம் தொக்கு-சட்சு-சிகுவா-கிராண-மென்கிற ஞானேந்திரியங்கள்-சத்த-பரிச-ரூப-ரச-கந்ததன்மாத்திரைகளினால்-வாக்கு-பாணி-பாதம்-குய்யம்-குதங்களென்கிற கன்மேந்திரியங்களையறிகிறது-தன்னாலறியப்பட்ட கன்மேந்திரியங்கள் தானல்ல-இந்தக் கன்மேந்திரியங்கள் பஞ்சதன்மாத்திரை, வியஷ்டி ரசோம்சத்தினாலானது ஆகையாலிந்தக் கன்மேந்திரியங்களுடைய ஹானிவிருத்திகளினால் வருகிற சுகதுக்கங்கடனக்கில்லை-இந்தக் கன்மேந்திரியங்களே தானானால் இந்தக்கன்மேந்திரியங்கள் போனாற்றான் போகவேண்டுமே-இந்தக்கன்மேந்திரியங்கள் போனாலுந் தான்போகவில்லையே-ஆனபடியினாலிக்கன்மேந்திரியங்களுக்குச் சாட்சியாயறிந்த ஞானேந்திரியங்களேதான்-இப்படியே சுரோத்திரம்-தொக்கு-சட்சு-சிகுவா-கிராணங்களென்கிறஞானேந்திரியங்களுக்குச் சத்த-பரிச-ரூப-ரச-கந்த தன்மாத்திரைகளென்கிற விஷயங்களுண்டாயிருந்தாலும் அகங்காரம் பிராணவாயுவோடே கூடிக் கிராணேந்திரியத்தைப் பற்றிக் கந்தமறிகிறது-இப்பிராணவாயு, கிராணேந்திரியம், கந்ததன்மாத்தி

ணை, இந்த மூன்றையு மறிந்த வகங்காரமேதான்-தன்னாலறியப்பட்ட விந்தமூன்றுந் தன்னை யறியமாட்டாதாகையாற்சடம்.---இந்த மூன்றுந் தானல்ல-இந்தமூன்றுஞ் சமஷ்டிரசோம்சத்தினாலும், வியஷ்டி, சாத்விகாம்சத்தி லானதுமனது - இம்மூன்றினுடைய ஹானிவிருத்திகளினால் வருகிற சுகதுக்கங்கடனக்கில்லை-இந்த மூன்றுந்தானா விந்தமூன்றும்போனாற்றான்போகவேண்டுமே-இந்த மூன்றும்போனாலுந்தான்போகவில்லையே - ஆகையாலிந்தமூன்றுக்குஞ் சாட்சியாயறிந்த அகங்காரமேதான்-இப்படியேசித்தம், அபானவாயுவோடேகூடிசிருவேந்திரியத்தைப்பற்றி ரசத்தையறிகிறது ஆகையாலிந்தவபானவாயு - சிருவேந்திரியம், ரசதன்மாத்திரை-இம்மூன்றையு மறிந்தசித்தமேதான் - தன்னாலறியப்பட்ட இந்த மூன்றுந் தன்னை யறியமாட்டாதாகையாற் சடம் --- இந்த மூன்றுந் தானல்ல இந்த மூன்றும் ரசோம்சசமஷ்டியினாலும் சாத்விகாம்ச வியஷ்டியினாலு மானது - ஆகையா லிந்த மூன்றினுடைய ஹானிவிருத்திகளினால்வருகிற சுகதுக்கங்க டனக்கில்லை - இந்த மூன்றுமே தானா விந்த மூன்றும் போனாற்றான் போகவேண்டுமே இந்த மூன்றும்போனாலுந்தான்போகவில்லையேஆகையாலிந்தமூன்றுக்குஞ்சாட்சியாயறிந்தசித்தமே

தான்-இப்படியேபுத்தி - உதானவாயுவோடே கூடி நேத்திரேந்திரியத்தைப்பற்றி ரூபத்தையறிகிறது-இந்த உதானவாயு நேத்திரேந்திரியம் ரூபதன்மாத்திரை-இந்தமூன்றையுமறிந்தபுத்தியேதான்- தன்னாலறியப்பட்ட விந்தமூன்றுந் தன்னை யறியமாட்டாதாகையாற் சடம்---இந்த மூன்றுந் தானல்ல இந்த மூன்றும் சமஷ்டி, ரசோம்சத்தினாலும் வியஷ்டி, சாத்விகாம்சத்தினாலானது- ஆகையா லிந்த மூன்றினுடைய ஹானிவிருத்திகளினால்வருகிற சுகதுக்கங் கடனக்கில்லை. இந்தமூன்றுமேதானானாலிந்தமூன்றும்போனாற்றான் போகவேண்டுமே இந்த மூன்றும் போனாலுந்தான்போகவில்லையே ஆனபடியினாலிந்தமூன்றுக்குஞ்சாட்சியாயறிந்த புத்தியேதான்.

இப்படியே மனது வியானவாயுவுடனே கூடித் தொக்கேந்திரியத்தைப்பற்றி பரிசத்தை யறிகிறது ஆகையாலிந்தவியானவாயு தொக்கேந்திரியம் பரிசவிஷயம்-இந்தமூன்றையு மறிந்தமனமேதான்-தன்னாலறியப்பட்ட இந்தமூன்றுந் தன்னையறியமாட்டாதாகையாற்சடம்.--இந்த மூன்றுந் தானல்ல. இந்தமூன்றும் பரிசதன்மாத்திரை - சமஷ்டி, ரசோம்சத்தினாலும் வியஷ்டி, சாத்விகாம்சத்தினாலு மானது ஆகையாலிந்த மூன்றினுடைய ஹானிவிருத்திகளினால் வருகிற சுகதுக்கங்க டனக்கில்லை - இந்தமூ

ன்றுமேதானானவிந்தமூன்றும்போனாற்றான் போகவேண்டுமே இந்தமூன்றும் போனாலுந் தான்போகவில்லையே-ஆகையா லிந்தமூன்றுக்குஞ் சாட்சியாயறிந்த மனமேதான்.

இப்படியே ஞானம் சமானவாயுவுடனேகூடி சுரோத்திரோந்திரியத்தைப்பற்றி சத்தத்தையறிகிறது ஆகையாலிந்தச்சமானவாயு, சுரோத்திரோந்திரியம், சத்தவிஷயம், இந்தமூன்றையுமறிந்த ஞானமேதான்-தன்னா லறியப்பட்ட விந்த மூன்றுந் தன்னையறியமாட்டாதாகையாற்சடம்,--இந்த மூன்றுந்தானால்ல இந்தமூன்றுஞ் சத்ததன்மாத்திரை-சமஷ்டி, ரசோம்சத்தினாலும் வியஷ்டி, சாத்விகாம்சத்தினாலுமானது ஆகையா விந்த மூன்றினுடைய ஹானிவிருத்திகளினால் வருகிற சுகதுக்கங்க டனக்கில்லை, இந்தமூன்றுமேதானான விந்த மூன்றும் போனாற்றான் போகவேண்டுமே-இந்த மூன்றும் போனாலுந்தான்போகவில்லையே ஆனபடியினா லிந்த மூன்றுக்குஞ் சாட்சியாயறிந்த ஞானமேதான்.

இந்தப்பிராணாதி வாயுக்களைந்து, சுரோத்திராதி ஞானேந்திரியங்களைந்து, சத்தாதிவிஷயங்களைந்து, ஆகப்பதினைந்தையுமறிந்த ஞானம் - மனது - புத்தி-

கமும் - உகாரமாத்திரையும் - சாத்விககுணமும் - இச்சாசத்தியும் - விஷ்ணுமூர்த்தியும் - பிராணமய கோசமும் - மனோமயகோசமும் - விஞ்ஞானமய கோசமும் - நான்வார்த்தைசொல்லுகிறவன் - நான் தாதா - நான்நடக்கிறவன் - நான்சலவிசர்ச்சனம்ப ண்ணுகிறவன் - நான்மலவிசர்ச்சனம் பண்ணுகிறவ ன் - நான்ஊமையன் - நான்மொண்டி - நான்முடவ ன் - நான்பத்தகோஷ்டன் - நான்பண்டகனென்கிற கன்மேந்திரியங்களுடைய கிரியா வத்தியாசங்களும் நான்கேட்கிறவன், நான்பரிசிக்கிறவன், நான்பார்க் கிறவன், நான்ருசியறிகிறவன், நான்வாசனையறிகிற வன், நான்செவிடன், நான்மரத்துப்போயிருக்கிற வன், நான்குருடன் - நான்ருசியறியாதவன், நான் மூக்கிறையனென்கிற ஞானேந்திரியங்களுடைய கி ராகாத்தியாசங்களும், நான் ஜீவிக்கிறவன், நான்ச ஞ்சரிக்கிறவன், நான் சத்தியுடையவன், நான்வீரிய முடையவன், நான்பசித்தவனென்றும், நான்தாகி ச்சவனென்றும் - நான்வாயுவேகனென்றும் - நான் பலமுடையவனென்றும் - நான் அம்பளையானசித் தன் - நான் அடயோகி - நான்லயயோகியென்றும்நா ன்கண்டுறந்துமூடுகிறவன் - நானிருமுகிறவன் - நான் ஆம்முகிறவன் - நான்கொட்டாவிவிடுகிறவன் - நான் விழுங்குகிறவனென்றும் - நான் வாத்தியபண்ணுகிற

வன்-நான்ஜீரணம்பண்ணிக்கொள்ளுகிறவன் - நான்
ஏப்பமிடுகிறவ னென்றும்,----இவை முதலாகிய ப
ஞ்சப் பிராணன்களுடைய கிரியாத்தியாசங்களும்
நான்சங்கற்பவர்த்தன், நான்மனோவேகி, நான்போ
கி, நான்மந்திரயோகி, நான்சோகி, நான்ராகி, நா
ன்மோகி, நான்துவேஷி, நான்காமி, நான் சமுசய
முள்ளவனென்றும்- நான்புத்திவந்தன், நான்விவே
கி,நான்மகாபுத்தியுள்ளவன்---நானேகசந்தக்கிராகி-
நான்கர்த்தா---நானிச்சயவந்தன்---நான்விருத்தன்-
நான்பண்டிதன்- நான் லோகாந்தரகாமியென்றும்-
நான்சஞ்சலன்- நான்சபலன்---நான்சிந்தகனென்று
ம்,----நானகங்காரி- நானுக்கிரன்-நான்வீரன் - நான்
சூரன்---நானபிமானியென்கிற இவை முதலான அந்
தக்கரணங்களுடைய கிராகாத்தியாசங்களும்---உதா
த்தம்-- அநுதாத்தஞ்--ஸ்வரிதங்களென்கிற வேதசுர
ங்களும்-சத்தசுரங்களும் - ராககீதங்களும்-பேரி-மி
ருதங்க-சங்க - பணவ - கோமுகாதிவாத்தியங்களும்-
சதுர்விதபேதசத்தங்களும் - விலாப - பிரலாப-து
லாப-புருஷாலாப - காடின்னியாலாப - சோகாதிது
க்கசத்தங்களும் - அஷ்டாதசபாஷைகளும் - இவை
முதலானசத்தங்களுடைய- வத்தியாசங்களும் --- சீத
உஷ்ண- மிருது-கடின- தாரதம்மியாதி பரிசத்தினு

டையவத்தியாசங்களும்---நீல-பீத- சுவேத-ரத்தஅரி சனமுதலான-தாரதன்மியாதிரூபத்தினுடைய வத்தி யாசங்களும்---உப்பு - புளிப்பு - கைப்பு - தித்திப்பு- துவர்ப்பு முதலான - ரசதார தன்மியமான - ருசியி னுடைய வத்தியாசங்களும் --- சுகந்த - துர்க்கந்த- மிஸ்ரகந்த - தாரதன்மியாதி வாசனைகளினுடைய வத் தியாசங்களும் - இந்தச் சூட்சுமப் பிரபஞ்சத்தைக் குறித்துச் சொல்லப்பட்ட சத்தசாஸ்தி ர - தர்க்க சாஸ்திர மீமாம்ச சாஸ்திரங்களும்- சமஷ்டி - வியஷ்டியினுண்டான - அநேக வத்தியா சங்களும் --- இவை முதலான விந்தச் சூட்சுமப் பிர பஞ்சத்தின்பேரிற் றோற்றுகிற சகலவத்தியாசங்களு ம்,---இதற் காதார மான சூட்சுமப்பிரபஞ்சமும், சு சுவிஷிணைவந்தியா புத்திரகளை விந்த மித்தியாபுரு ஷின்போலவே காலத்திரயத்திலுந் தன்னிடத்தி லில் லை- இந்தவிருபத்து நான்கு தத்துவங்களைக் குறித்து ச் சூட்சுமசரீரமென்று சொல்லுமோவென்றால் - இ ந்தவிருபத்துநான்கு தத்துவங்களும் - விருத்திரூப மாய் வெவ்வேறுநாமங்க ளிருக்கிறபடியினாலும் ஞா னம் - சமானவாயு - சுரோத்திரேந்திரியம் - வாகிந்தி ரியம்-இந்த நான்குவிருத்தியுஞ் சத்தருஸ் மாத்திரை யைத்தவிரவில்லாதபடியினாலும் - மனது - வியான வாயு - தொக்கேந்திரியம் - பாணிந்திரியம் - இந்த

நான்கு விருத்தியும் பரிசதன்மாத்திரையைத் தவிர
வில்லாதபடியினாலும் - சித்தம் - அபானவாயு - சிரு
வேந்திரியம் - குய்யேந்திரியம் - இந்த நான்கு விரு
ருத்தியும் - ரசதன்மாத்திரையைத்தவிரவில்லாதபடி
யினாலும் - அகங்காரம் - பிராணவாயு - கிராணேந்
திரியம் - குதேந்திரியம் - இந்த நான்கு விருத்தியுங்
கந்ததன் மாத்திரையைத் தவிரவில்லாத படியினாலு
ம் - இந்தப் பஞ்சதன் மாத்திரைகளைப் பிரத்தியேக
மாய்ப் பார்க்குமிடத்தில் அகங்காரதத்துவ மென்கி
ற அவஸ்தையி லத்தியஸ்தமாய்த் தன்னிடத்திலெ
திராய்த்தோற்றுகிற அபஞ்சிகிருதமானபஞ்சதன்மா
த்திரைகளும் - இவைகளுக்குக் காரியமான சூட்சும
ப்பிரபஞ்சமும் - இதனிடத்தி லத்தியஸ்தமாய்த்தோ
ற்றுகிறநாமங்களும் - இதைக்குறித்துவந்த வாபாச
ங்களுஞ் - சசவிஷாண வந்தியா புத்திர ககனாரவிந்த
மித்தியாபுருஷன் போலவேகாலத்திரயத்தி லுந்தனு
க்கில்லை - இதற்குச்சம்மதிவசனம்.-

சுலோகம்.

పంచభూతమయంవిశ్వంమరీచిజలసన్నిభం। కస్యే
హోభూన్నమస్కారఃయోహమేకోనిరంతరః॥ [౨౮]

சூக்ஷ்மப்பிரகரணம்.

இதனதுபொருள்.

பஞ்சபூத ஸ்வரூபமான பிரபஞ்சங்கா னற்சலத் தாக்கொப்பானது - நானேயெங்கும் பரிபூரணமா யிருக்கிறேன், ஆருக்கும் நமஸ்காரம் என்றும்

சுலோகம்,

మనోనబుద్ధిర్న శరీరమింద్రియం తన్మాత్రభూతా
నినభూతపంచకం। అహంకృతిశ్చాపినచిత్స్వరూపంత
విరాశమాత్మానముపైతిశాశ్వతం॥ [౨౫]

இதனதுபொருள்.

சித்ஸ்வரூபமாயும் - சர்வேஸ்வரனாயும், சாஸ்வதமாயுமிருக்கின்ற- ஆத்மஸ்வரூபத்தை மனதும் புத்தியும், அகங்காரமும், பஞ்சதன்மாத்திரையும், பஞ்சமகாபூதங்களும், சரீரமும் அடையமாட்டாது. என்றும் அவதூதகீதை முதலிய சாஸ்திரங்களில் தத்தாத்திரய யோகீஸ்வரர் முதலிய பெரியோர்கள் சொல்லியிருக்கிறபடியா லிதுவே பிரமாணசித்தம்.

சூட்சமப்பிரகரணஞ்சம்பூரணம்.

ஐந்தாவது

காரணப்பிரகரணம்.

முற்பிரகரணத்திற் சங்கற்பரூபமான சூட்சுமசரீரத்தையும், அதற்காதாரமான பஞ்சதன்மாத்திரைகளையும், நியதிகளோந்தவைகட் காதாரமான வவித்தையை நியதிகளோதற்பொருட் டதன்மயமான காரண சரீர ஸ்வரூப நிரூபிக்கிறார்.

சுலோகம்.

సచ్చిదానందస్వరూపే స్వాత న్యారోపితం వపుః। కా
రణం తత్స్వరూపం తు తావ త్ప్రనిరూప్యతే॥ [௬௨]

இதனதுபொருள்.

சச்சிதானந்தஸ்வரூபமான தன்னிடத்திலாரோபிக்கப்பட்டது காரணசரீரம் அதினுடைய ஸ்வரூபமானது நிரூபிக்கப்படுகிறது.

காரண சரீரமாவது, பஞ்சதன்மாத்திரைகள் பிரத்தியேகம் - பிரத்தியேகமாய் விபகரித்துப் பார்க்குமிடத்திற் சசவிஷாணவந்தியாபுத்திர ககனாரவிந்தமித்தியா புருஷன்போலவே யொன்று மில்லாமற்போனபடியினால் - இது வொன்று மில்லையென்றுதோற்றப்பட்டதே காரணசரீரம் - இந்தக்காரணசரீரத்துக்கு அகங்காரதத்துவ மென்றும்-அவித்தையென்றும் - தமமென்றும் - தூலசூட்சும சரீரங்களுக்குக்காரணமென்றும்- ஒன்றுந் தெரியவில்லையென்றும்- ஒன்றுங்காணவில்லையென்றும் -ஒன்றுந்தோணவில்லையென்றும்- பிராந்தியென்று மிவை முதலான பரியாயநாமங்களையுடைய திதுவே காரணசரீரம்,---இதற்குச்சம்மதிவசனம்.

சுலோகம்.

అనాద్యనిర్వాచ్య తయాకారణోపాధిరుచ్యతే।
ఉపాధి త్రితయాదన్యమాత్మానమవధారయేత్ ॥ [౨౮]

இதனதுபொருள்

அநாதியாகியும், அநிர்வாச்சியமாகவு மிருக்கின்றபடியாற் காரணோபாதியென்றுசொல்லப்பட்டது-

இம்மூன்றுபாதிகளுக்கும் அன்னியமாயாத்மாவை யறியவேண்டியது.

என்றுஆசாரியசுவாமிக ளாத்மபோதமென்கிறகிரந்தத்தி னிரூபித்திருக்கிறானபடியனு லிதுவே பிரமாணசித்தம்.

தன்னிடத்தி லத்தியஸ்தமாய்த்தோற்றுகிற விந்தக்காரணசரீரந்தானல்ல - அதெப்படித் தானல்லவென்றால் ஒன்றுமில்லையென்று தோற்றப்பட்டவிந்தக் காரணசரீரத்துக் கொன்றுமில்லை யென் றறிந்தஞானமேதான் - தன்னுலறியப்பட்ட விந்தக் காரணசரீரந் தன்னை யறியமாட்டாதாகையாற்சடம்---இந்தக் காரணசரீரந்தானல்ல - இந்தக்காரணசரீரமகதத்துவத்திலுலானது -இந்தக்காரணசரீரத்தினுடையஹானிவிருத்திகளினுல் வருகிற சுகதுக்கங்க டனக் கில்லை இந்தக்காரணசரீரமே தானுனு லிந்தக்காரணச்சரீரம் போனுற்றுன் போகவேண்டுமே - இந்தக் காரணசரீரம் போனுலுந்தான் போகவில்லையே - அதெப்படிப்போகவில்லை யென்றுற் சமாதியவஸ்தையிற் காரணசரீரம் போனுலுந் திரும்பவும் விருத்தி வந்தபின்பு சுகமேயிருந்தே னென்று சொல்லுகிருனபடியினுலிந்தக்காரண சரீரந்தானல்ல - இந்தக்காரண சரீரத்துக்குச் சாக்ஷியாயறிகிற ஞானமேதான்.

இந்தக் காரணசரீரத்துக்குச் சாக்ஷியாயறிகிற தா
னேசமஷ்டிகாரணசரீரங்களிலேயும்---அனுசூதமா
யிருந்தறிகிறஞானமேதான் --- தன்னையறியப்பட்ட
விந்தச் சமஷ்டிகாரண சரீரந் தன்னை யறியமாட்டா
தாகையாற்சடம்--- இந்தச்சமஷ்டிகாரணசரீரந்தா
னல்ல, இப்படித் தனக்கெதிராய்த் தோற்றுகிறசம
ஷ்டி, வியஷ்டியான, காரண சரீரத்தின்பேரி லத்தி
யஸ்தமாய்த்தோற்றுகிற பிராஞ்ஞன் - பரமார்த்தி
கன். அவச்சின்னன் - அவ்வியாகிருத மென்கிற அபி
மானித்துவமும் - சுழுத்தியவஸ்தையும் - ஆனந்தம
யகோசமும் - தாமசகுணமும் - ஆத்மானந்த போ
கமும்-ஞானசத்தியும்- ருத்திரமூர்த்தியும்--- இருதய
ஸ்தானமும்---மகாரமாத்திரையும்- நான்போத்துரு
நான்சந்துஷ்டன்- நான்சாத்விகன்--நான்ராசதன்---
நான்றுமசன் - நான்சடன் நானனுர்தன் -- நானஞ்
ஞானி - நான்மூடன் - நான்சத்தன்- நான்சுண்டன்-
நான்மோகி நான்விவேகி - நான்பிருந்தன் --நான்
பாபிஷ்டன்-நான் சோம்பன் - நாமொன்றுக்குமா
காதவன் - நாமெரிந்து போட்டவன்-- நான் கெட்
டுப்போனவன்-நான்வெறியன் -நான்கையாலாகாத
வனென்கிறபிராந்திஜந்நியாத்தி யாசத்துவமும் -இ
ந்தக்கார ணசரீரத்தைக்குறித்துச் சொல்லப்பட்ட
சத்தசாஸ்திரம்- யோகசாஸ்திரம் வேதாந்தசாஸ்திர

முதலியசாஸ்திரங்களும்,---சமஷ்டி, வியஷ்டி,யெ ன்கிறவத்தியாசங்களும்—இவைமுதலான விந்தக்கா ரணப்பிரபஞ்சத்தின்மேலிற் றோற்றுகிற சகலவத்தி யாசங்களுஞ்சசவிஷாணவந்தியா புத்திரககனாரவிந் தமித்தியாபுருஷன்போலவே காலத்திரயத்திலுந்த னக்கில்லை - அதெப்படித்தனக்கில்லையென்றா லத ற்குத் திஷ்டாந்தபூர்வகமாகச் சொல்லுகிறோம்.

அதென்னவென்றால் கடத்தைக்குறித்துவந்த க டாபாவங்கடத்தைத்தவிர வெப்படியில்லையோவப் படியே பிரபஞ்சத்தைக்குறித்து வந்த பிரபஞ்சா பாவம் பிரபஞ்சத்தைத்தவிரவில்லை- ஆனபடியினா ன் மகதத்துவத்தின்மேலிலத்தியஸ்தமாய்த் தோற் றுகிற பிராந்திஜந்நியநாமங்களும் - இத்தைக் குறித் துவந்த வாபாசங்களும் - சசவிஷாண வந்தியாபுத் திரககனாரவிந்தமித்தியா புருஷன்போலவே காலத் திரயத்திலுந் தனக்கில்லை சித்தம் - இதற்குச்சம்மதி வசனம்.

சுலோகம்.

దేహేంద్రియమనోబుద్ధి ప్రకృతిభ్యోవిలక్షణం। త
ద్వృత్తిసాక్షిణంవిద్యాదాత్మానంరాజవత్సదా॥

குருவாக்கியத்தினாற் றானென்றறிந்து நின்றதே மூலப்பிரகிருதி ரகிதமான தன்னுடைய ஸ்வரூபம்- இதற்குத்திஷ்டாந்தம்- ஆறுகடந்து பத்துபேர்போகச்சே அந்தப் பத்துபேரிற் கணக்காளியான வொருவன் மற்ற வொன்பதுபேரையுமெண்ணித் தன்னையெண்ணாமற் பத்தாவான் றானாயிருந்துந் தன்னைப் பத்தாவானென்றறியாமற்போனதே அதிஷ்டானுஞ்ஞானமானமூலப்பிரகிருதி ஆப்தவாக்கியத்தினாற் பத்தாவான் றானென்றறிந்து நின்றதே மூலப்பிரகிருதிரகிதமான தன்னுடைய ஸ்வரூபம்- இதற்குச் சம்மதிவசனம்.

ஞானஞ் சுளுவுமாம்-பளுவுமாம் - அதெப்படியென்னில் தானென்றறிந்த அறிவு தானெனச்சுளு, அதுதானன்றென்கிறமறதியே பளுவென்றுலோககுருவாயிருக்கப்பட்ட வேதவியாசபகவான் ஸ்ரீராமஸ்தவராசமென்கிறகிரந்தத்தினிரூபித்திருக்கிறபடியினாலும் அறிந்தேனென்கிறநினைப்பும்அறியேனென்கிறநினைப்பும் இவ்விரண்டுமின்றி யிருக்கிறதே-நிரதிசயானந்தனென்றுஅவதூதகீதையில் - தத்தாத்திரயயோகீஸ்வரர் நிரூபித்திருக்கிற படியினாலும் ஆசாரியர்-சீடன் - இவர்களுடைய பிரச்சினோத்தரம் - ஆலம்பழத்தைக்கொண்டுவா, ஸ்வாமி - இதோ

கொண்டுவந்தேன் - அதைட்பிள - பிளந்தேன், அதி லென்னகண்டாய், ஒன்றுங் காணவில்லை பரமாணுக்களைக்கண்டேன், அப்பரமாணுக்களி லொன்றைப்பிள-பிளந்தேன்-அதி லென்னகண்டாய் ஒன்றுங் காணவில்லை - இப்படிக்கொத்த அணுவான, வினாயில் இலை பணை- விழுது - பொந்துகள் - முதலான விகாரங்களோடு கூடிய ஆலமரமானது எப்படி அடங்கியிருந்ததோ அப்படியே யுன்னிடத்திலும் ரூபபிரபஞ்சமு மடங்கியிருக்கின்றது.

என்று சாந்தோக்கிய வுபநிடதத்திற் சொல்லியிருக்கிறபடியினாலும் இதுவே பிரமாணசித்தம்.

மகாகாரணப்பிரகரணஞ்

சம்பூரணம்.

ஏழாவது

நிசானந்தானுபூதிப் பிரகரணம்.

முற்பிரகரணத்தில் வித்தியாரூபமான மஹாகாரணசரீரத்தை நியதிகளாந் நிலைகட்காதாரமான சச்சிதானந்தவொருமையினுள்ள நிரதிசயானந்த மனுபவமாம்பொருட்டதற்கங்கமான நிசானந்தானுபூதிப்பிரகரண நிரூபிக்கிறார்.

சுலோகம்.

సచ్చిదానందస్వరూపేణాత్మాఽమృతసరస్వతి॥ స
తిష్ఠన్ముక్తిర్నాత్వతికాంతత్స్వరూపన్నిరూప్యతే॥ [౩౭]

இதனது பொருள்.

சச்சிதானந்த ஸ்வரூபமான ஆத்மா வென்றும் அமிர்தசாகரத்தில் நித்தியசாஸ்வதமானமுத்தியிருக்

கின்றது- அதனுடைய ஸ்வரூபமானது நிரூபிக்கப் படுகிறது.

அஃதாவது - மூலப்பிரகிருதிரகிதமான தன்னு டையஸ்வரூப வர்ணநீயநாமங்களெப்படியென்னி ல்,சத்தேசுயந்தோன்றுகிறபடியினாற் சித்தாச்சு- சி ந்தேசுயமாயிருக்கிறபடியாற்சத்தாச்சு - இதற்கிர ண்டாம்வஸ்துவில்லாதபடியினாலானந்தமாச்சு-ஆ கச்சே, சச்சிதானந்தஸ்வரூபமாய், அகண்டானந் தஸ்வரூபமாய்ப் பரிபூரணானந்த ஸ்வரூபமாய்நித் தியானந்த ஸ்வரூபமாய், நிர்விசேஷானந்த ஸ்வரூ பமாய்,நிரூப, நிருபத்திரவ, நின்மல,நிரவயவ, நிர ந்தர, நித்திய, நிராகார, நிபத்த,நிஷ்கர்ம, நிர்ச்சங் க,நிர்விகாரஸ்வரூபமாய், நிர்க்குணநிஷ்கிரிய - நிர் விகற்ப, நிரஞ்சனநிர்லக்ஷிய, நிராலப்ப, நிரதிசயா னந்தஸ்வரூபமாய், நிரீச, நிர்லேப, நிர்வாண,நிச்சி ந்திய,நிர்வசன-நிரூபானந்தஸ்வரூபமாய்---நிர்வே த்திய நிர்ச்சல - நிர்சேஷ-நிர்ச்சத்த - நிர்ச்சீவ-நிர்ச் சலானந்தஸ்வரூபமாய் - நிர்ப்பின்ன- நிர்ப்போத- நிர்நாம - நிர்வியாச்சிய - நிர்ப்பாவ- நிஷ்பிரபஞ்ச ஸ்வரூபமாய்-அச்சேத்திய-அக்கிலேத்திய- அசோ ஷிய-அதாகிய-அக்கிராகிய- ஆதியந்தரகிதானந்தா ஸ்வரூபமாய்-அக்ஷர-அமல-அப்பிரமேய-அநாசிரய ஆனந்தகந்தஸ்வரூபமாய் அநாதார-அபிர்த அவிபி

ர்க்கிய-அநாமய-அதிரிசில-அத்துவிதானந்தஸ்வரூபமாய் அபாகிய-அந்திய-அபாசிய-அநிர்வாச்சிய-அதிந்திரிய-அபோத்திய-அசூனிய-அக்குரோத அபரோக்ஷானந்தஸ்வரூபமாய்-இவைமுதலான தேன் ஸ்வரூபத்தினுடைய வர்ணநீய நாமங்களாம்,—இதற்குச் சம்மதிவசனம்.

சுலோகம்.

నిర్గుణో నిష్క్రియో నిత్యో నిర్వికల్పో నిరంజ
నః॥ నిర్వికారో నిరాకారో నిత్యముక్తోऽస్మి నిర్మలః॥ [౩౩

இதனது பொருள்.

ஒருகுணமுமில்லாதவனாய், ஒருகர்மமுமில்லாதவனாய், ஒரு விகற்பமுமில்லாதவனாய், ஒருமானமுமில்லாதவனாய், ஒரு விகாரமுமில்லாதவனாய், ஒருருவங்களுமில்லாதவனாய், நித்தியமுத்தனா யிருக்கிறேன்.

இப்படி ஆசாரியசுவாமிக ளாத்மபோதமென்கிற கிரந்தத்தி னிரூபித்திருக்கிறா ரானபடியினாலும் வேதசாஸ்திரங்களிற் சொல்லி யிருக்கிற படியினாலும் இதுவேபிரமாணசித்தம்.

இந்தஸ்வரூபத்தினுடைய வர்ணநீயநாமங்கள் பிர பஞ்சத்தைக்குறித்துவந்ததேயல்லாமல்வேறல்ல- அதெப்படியென்னில் அசத்தைக்குறித்துச் சத்தென் றும் - சடத்தைக்குறித்துச் சித்தென்றும், துக்கத்தைக்குறித்தானந்தமென்றும் - சகுணத்தைக்குறித்து நிர்க்குணமென்றும் - ஆவரணத்தைக்குறித்து நிராவரணமென்றும்- சாகரத்தைக்குறித்து நிராகாரமென்றும் - விஷயானந்தத்தைக்குறித்து நிர்விஷயானந்தமென்றும்- பேதத்தைக்குறித்து அபேதமென்றும் - பரோக்ஷத்தைக்குறித்து அபரோக்ஷமென்றும் - தொய்தத்தைக் குறித்து அத்தொய்தமென்றும் - விகாரத்தைக்குறித்து நிர்விகாரமென்றும்-அவலம்பலத்தைக்குறித்து நிராலம்பமென்றும் சங்கத்தைக்குறித்து நிர்சங்கமென்றும்- அப்பிரகாசத்தைக்குறித்துப் பிரகாசமென்றும் - கண்டத்தைக்குறித்து அகண்டாகாரமென்றும் - நாமத்தைக்குறித்து நிர்நாமமென்றும்-சூனியத்தைக்குறித்துப்பூரணமென்றும்-வாச்சியத்தைக்குறித்து அநிர்வாச்சியமென்றும்-சத்தத்தைக்குறித்து நிர்ச்சத்தமென்றும்-அஞ்சனத்தைக்குறித்து நிரஞ்சனமென்றும், வேத்தியத்தைக்குறித்து நிர்வேத்தியமென்றும், சலனத்தைக்குறித்து நிர்ச்சலனமென்றும், மிரிதத்தைக்குறித்து அமிர்தமென்றும், ஆதியந்தசகி

ந்தத்தைக்குறித்து ஆதியந்தரகிதமென்றும்-பிரபஞ்
சத்தைக்குறித்து நிஷ்பிரபஞ்சமென்றும் - சித்தநி
ரோதத்தைக்குறித்து யோகமென்றும்-லக்ஷியத்தைக
க்குறித்து நிர்லக்ஷியமென்றும், பெயர்களாம்.---பி
ன்னுஞ் சர்வம்பிரமமென்றுஞ் சர்வஞ்சூனியமென்
றும்,இவைமுதலானதன்ஸ்வரூபத்தினுடைய வர்ண
நீயநாமங்கள் பிரபஞ்சத்தைக்குறித்து அத்யாச
மாய்த்தோற்றிற்றேயல்லாமற் சதாயிருந்தநாமங்கள்
சசவிஷாண வந்தியாபுத்திர ககனாரவிந்த மித்தியா
புருஷன்போலவே காலத்திரயத்திலுந்தனக்கில்லை-
ஆனபடியினாற் பேதாபேதரகிதமாய்ப்புண்ணியா
புண்ணியரகிதமாய்த்தொய்தாத்தொய்தரகிதமாய்
ப்பாவாபாவரகிதமாய்ஞானாஞ்ஞானரகிதமாய்காரி
யகாரணரகிதமாய் மாயாமோகரகிதமாய் பந்த
மோக்ஷரகிதமாய் சுகதுக்கரகிதமாய் காமியாகாமி
யரகிதமாய் கம்பியாகம்பியரகிதமாய் ஜநந மரண
ரகிதமாய் விருத்திக்ஷயரகிதமாய் உதயாஸ்தமன
ரகிதமாய் திவாராத்திரரகிதமாய்- இவைமுதலாயி
ருக்கப்பட்ட தொந்தரகிதமாய் சாக்ஷிப்புருஷனாயி
ருக்கப்பட்ட தன்னுடையஸ்வரூபத்தில் அதிஷ்டா
னஞ்ஞானமென்கிற ஆவரணமானமூலப்பிரகிருதி
யும் விக்ஷேபகாரணமானமகத்துவம், அகங்கார
தத்துவம், பஞ்சதன்மாத்திரை, சூக்ஷுமதூலாதிப்பி

ரபஞ்சமெப்படித் தோற்றுகிறதென்றால் திஷ்டாந்தபூர்வகமாய் நிரூபிக்கிறோம்.

அந்தத் திஷ்டாந்தமென்னவென்றால் மூலப்பிரகிருதியெங்கிற மித்தியாபுருஷனிடத்தில் அகங்காரதத்துவமென்கிற இல்லாதசித்திரக்கோற் கையிற்பிடித்துக்கொண்டு பஞ்சதன்மாத்திரையெங்கிற இல்லாத பஞ்சவன்னங்களினாற் றூலசூட்சமமெங்கிற பொய்யானசித்திரத்தைச் சூனியமென்கிற வாகாசத்திலெழுதினாற்போல விருக்கிறதென்று வசிட்டபகவான் வாசிட்டமென்கிற கிரந்தத்தி னிரூபித்திருக்கிறானபடியினாலிந்த துஷ்ணீம்பூதனாயிருக்கப்பட்டதன்னுடையஸ்வரூபத்தில் அதிஷ்டானஞ்ஞானமானஆவரணமென்கிறமூலப்பிரகிருதியும் விக்ஷேபகாரணமான மகதத்துவ மகங்காரதத்துவமும் பஞ்சதன்மாத்திரை சூட்சுமதூலப்பிரபஞ்சமும்- சாக்கிரசொர்ப்பனசுழுத்திதுரியாவத்தைகளும் - விசுவதைசத பிரபஞ்சப்பிரத்தியக்குசைதன்னியமும்விராட்டு-இரணியகர்ப்ப-அவ்வியாகிருத சருவசாக்ஷித்துவமும் ராசசதாமசசத்துவமான சுத்தசத்துவகுணங்களும் யுத்தபரியுத்த ஆனந்த ஆத்மானந்தபோகங்களும் சிற்சத்தி பராசத்திஆதிசத்தி இச்சாசத்தி கிரியாசத்திகளும் பிரமா-விஷ்ணு-ருத்திரன்-

மஹேஸ்வர சதாசிவமூர்த்திகளும் நேத்திரங்கண்டம் - இருதயம் - மூர்த்தன்னியஸ்தானங்களும் - அகார - உகார - மகார - பிந்துமாத்திரைகளும் - இத்தைக்குறித்து வந்த அத்தியாசநாமங்களும், - இத்தைக்குறித்துச்சொல்லப்பட்ட சாஸ்திரங்களும் இத்தைக்குறித்துவந்த ஆபாசங்களும் - இத்தைக்குறித்துவந்த ஸ்வரூபவர்ண நீபநாமங்களும், - இந்தஸ்வரூபவர்ணநீயமாய்ப்பிரதிபாதிக்கிற மகாவாக்கியங்களும், இந்தமகாவாக்கியங்களையுபதேசம்பண்ணிக்கொண்ட சீடர்களும், - இந்தச்சீடரைக்குறித்துபதேசம்பண்ணின சற்குருக்களும், இந்தச்சற்குருக்களுடையவுபதேசங்களும், இந்தவுபதேசத்திலே வந்த சிரவண, மநந, நிதித்தியாச, சமாதி, சாக்ஷாத்காரபரோக்ஷ, அபரோக்ஷங்களும், சீவன்முத்திவிதேகமுத்திகளும் - பந்தமோக்ஷங்களும் பிராரத்த ஆகாமியசஞ்சிதங்களும் ஆருடன் அநாருடர்களும் - பூதபவுஷியவர்த்தமானகாலங்களும் - கிரியானுவித்தம் - சத்தானுவித்தம் நிருவிகற்ப சமாதிகளும் கர்மப் பத்தி வைராக்கியம் - யோகத்தியானங்களும் சாம்பவிமுத்திரை - கேசரிமுத்திரை - அமனஸ்கமுத்திரை - மவுனமுத்திரைகளும் இந்தப்பிரபஞ்சம் அஞ்ஞானத்தினால் தோற்றிற்றென்றும் ஞானத்தினாலில்லாமற்போகுதென்றும் யோகத்தினாற்றன்னைத்தா

ண் பார்க்கவேண்டுமென்றும் பிரகாசமாகக்கண்டே னென்றும்ஞானத்தினுற் றன்னைத்தானறியவேண்டு மென்றும் இப்போ தறிந்துகொண்டே னென்றும் இவைமுதலான சகலசங்கற்பப் பிராந்திகளும்- மரு மரீசிகையினிடத்திற்சலங் காலத்திரயத்திலு மெய் படியில்லையோசுத்தியினிடத்தில் ரசிதங்காலத்திரய த்திலுமெய்ப்படியில்லையோ ரச்சுவினிடத்திற் சர்ப் பங்காலத்திரயத்திலுமெய்ப்படியில்லையோ அப்படி யே அதிஷ்டானஞ்ஞானமென்கிற மூலப்பிரகிருதி முதலான சகலபிராந்திகளும் நிசானந்தானுபூதி ஸ்வரூபமாய் தூஷ்ணீம்பூதனைதன்னிடத்திற் சசவி ஷாண வந்தியாபுத்திர ககனாரவிந்த மித்தியாபுருஷ ன்போலவே காலத்திரயத்திலுமில்லை இதற்குச்சம் மதிவசனம்.

சுலோகம்.

సర్వశూన్యంమునశ్శూన్యంసత్యాసత్యంనవిద్యతే।
స్వభావభావితంప్రోక్తంశాస్త్రసంపత్తిపూర్వకం [౩౮]

இதனதுபொருள்.

சாஸ்திரசம்பத்திபூர்வகமாக ஸ்வரூபத்தைப்-பா

யதா

சுலோகம்.

ప్రత్యస్తమితభేదం యత్సత్తామాత్రమగోచరం। వచ
సామాత్మసంవేద్యం తజ్జ్ఞానం బ్రహ్మసంజ్ఞితం॥ [౪౨]

இதனதுபொருள்.

பேதமிறந்ததாகியும் சத்தாமாத்திரமாகியும் வாக்குக்ககோசரமாகியும் தன்னாலறியத்தக்கதாகியுமிருக்கின்றதெதுவோ அந்தஞானமே பிரமமெனப் பெயரையுடையதென்றும்.

சுலோகம்.

విభేదజనకే జ్ఞానే నాశమాత్యంతికం గతే। ఆత్మనో
బ్రహ్మణో భేదమసంతం కః కరిష్యతి॥ [౪౩

இதனதுபொருள்.

பேதத்தையுண்டுபண்ணுகிற வஞ்ஞானமானது முழுது நாசமடைந்தால் ஆத்மாவுக்கும் பிரமத்துக்குமில்லாதபேதத்தை யெவன்செய்வான் என்றும் விஷ்ணுபுராணத்திரில் வியாசபகவானிரூபித்திருக்கிறபடியினாலும் இதுவேபிரமாணசித்தம்.

நிசானந்தானுபூதிப்பிரகரணஞ் சம்பூரணம்.

சத்தப்பிரகரணம் முற்றிற்று.